2019 - இதழ் 05

இலவசம்

வைகாசி - 2019

# உள்ளான மனிதன்

மென்பிரதி

GRACE TABERNACLE
APOSTOLIC CHURCH

gtachurch.ca

# உள்ளான மனிதன்

மாதாந்த சஞ்சிகை - இலவசம்　　　2019 - இதழ் 05

## இயேசு சொன்னார்:

**வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**

# கிறேஸ் (ற்)ரபனக்கல்
# வெளியீடு

SCARBOROUGH, ONTARIO, CANADA ☎ 416.613.2909
(f)பின்ச் /மிட்லான்ட் சந்திப்புக்கு அருகில்

நீங்கள் தற்போது கிறிஸ்தவ **ஆவிக்குரிய** ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், அங்கே கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள்.

# இந்த இதழில்...

**2019 - இதழ் 05**


## 4 யாரிடத்தில் போவோம்

நம்பிக்கையில்லாத நிலையில் நிலையான நம்பிக் கையை உண்டுபண்ணி வாழச்செய்கின்றார். தேவன் மடங்கடிக்கப்பட்டவர்களை தூக்கிவிடுகின்றார். சத்துவ மில்லாதவனுக்கு சத்துவத்தை கொடுக்கின்றார்.

## 6 பேரொளி பிரகாசிக்கட்டும்

ஒரு விடயத்தைக் குறித்து உங்கள் மனதில் குழப்பம் ஏற்பட்டால், உங்களைத் தாழ்த்தி, 'இந்த காரியம் என க்கு குழப்பமாக இருக்கின்றது' என உங்கள் விண் ணப் பத்தை தேவனுக்கு தெரியப்படுத்துங்கள், சகல சத்திய த்திலும் எங்களை வழிநடத்தும் தேவ ஆவியானவர் தாமே காரியங்களை உங்களுக்கு தெளிவு படுத்துவார்.

## 10 பிரசங்கக் குறிப்புகள்

கர்த்தராகிய இயேசுவை தேடி வந்தவர்கள் யாவரும் பிரகாசம் அடைந்தார்கள். துக்கத்தோடே வந்தவர்கள், சந்தோஷத்தோடே திரும்பிப் போனார்கள்.

## 12 புதிய நாளுக்குள்...

கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.



**கிறேஸ் (ற்)ரபனக்கல்**

**210 Silver Star Blvd., Unit #807**
**Scarborough, ON M1V 5J9 Canada**

☎ 416.613.2909 info@gtachurch.ca


gtachurch.ca

# புதிய நாளுக்குள்...

அனுதின தியானக் குறிப்புக்கள்

## தலைப்பு அகராதி 12ம் பக்கத்திலிருந்து...


**மனக்குழப்பமான, சோர்வான நேரங்களில்**
... வைகாசி 2, 4, 5, 12, 13, 16, 18, 19, 20, 25, 26, 31

**போராட்டங்களில், பிசாசின் தந்திரங்களில் வெற்றி**
... வைகாசி 2, 4, 5, 12, 16, 19, 20, 23, 26, 28, 31

**பாவத்திலிருந்து விடுதலையடையும் வழி உண்டு**
... வைகாசி 4, 7, 10 , 14, 16, 17, 20 , 28

**முக்கிய தீர்மானங்களை எடுக்கும் முன்**
... வைகாசி 5, 6, 10, 12, 20, 21

**ஜெபத்தின் மேன்மை**
... வைகாசி 22, 28

**தெய்வீக ஆசீர்வாதங்கள்**
... வைகாசி 1, 11, 15, 17 , 25, 27

**மன நிறைவுடன் தேவனைத் துதியுங்கள்**
... வைகாசி 9, 23, 25, 28

**தேவனுக்கு பிரியமான வாழ்க்கை**
... வைகாசி 3, 6, 7, 8, 12, 15, 17, 21, 24, 29, 30, 31

**சமாதானமும் அமரிக்கையுமான வாழ்க்கை உண்டு**
... வைகாசி 1, 8, 13, 18 , 20, 25

**பொறுமையோடு காத்திருங்கள்**
... வைகாசி 2, 4, 9, 10, 12, 13, 18, 23, 25, 26, 28, 31

**தேவ நீதி வெளிப்படும்**
... வைகாசி 2, 9

**திவ்விய சுபாவங்கள் வெளிப்படட்டும்**
... வைகாசி 3, 7, 8, 15, 16, 18, 24, 29, 30

**வாழ்வு தரும் திருவசனம், ஐக்கியத்தின் மேன்மை**
... வைகாசி 6, 7, 8, 11, 14, 24, 27

**மேட்டிமை, வன்மம், பகை தலைதூக்கும் போது...**
... வைகாசி 6 , 14


gtachurch.ca

# யாரிடத்தில் போவோம் ஆண்டவரே

*போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்*

நாளைய நாளை எவ்விதமாய் சமாளிக்கப் போகின்றேன்? எனக்கு உதவி செய்யத்தக்கவர் யார்? என்று அங்கலாய்ப்பவர்களுண்டு. நான் எங்கே போகின்றேன் என்று எனக்குத் தெரியாது. கால் போன போக்கிலே போகின்றேன் என்று, நம்பிக்கை இழந்து வாழ்பவர்களுமுண்டு.

இயேசு இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே இப்பூமிக்கு வந்தார். நம்பிக்கையில்லாத நிலையில் நிலையான நம்பிக்கையை உண்டு பண்ணி வாழச்செய்கின்றார். தேவன் மடங்கடிக்கப்பட்டவர்களை தூக்கி விடுகின்றார். சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தை கொடுக்கின்றார். தன் வாழ்விலே செய்ய வேண்டியவற்றை செய்ய திராணியில்லாதவர்களுக்கும் சத்துவமில்லாதர்களுக்கும், தேவன் தம்முடைய பெலத்தையும், நம்பிக்கையையும் கொடுத்து வாழச்செய்கின்றார்.

அப்போஸ்தலர்களாய் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், சிலர் மீன்பிடிப்பதையும் சிலர் வரி வசூலிப்பதையும் வேறு சில தொழில்களையும் செய்பவர்களாயிருந்தனர். அவர்கள் தாம் அறிந்திருந்த தொழில் எதுவோ அதையே தமது வாழ்வாதாரமாய்க் கொண்டிருந்தனர். கர்த்தர் அவர்களைக் கண்டு அழைத்தார். மிகவும் மேலான உயர்ந்த வேலைக்காய் அவர்களை அழைத்தார். அவர்கள் அழைப்பை ஏற்றுக்கொண்ட நாள் முதல், ஆயிரம் வருடங்களுக்கு மேலாக, இந்த நாளிலும் உலகமானது அவர்களையும் அவர்கள் கற்பித்த தேவ வார்த்தைகளையும் மிகவும் கூர்ந்து கவனித்து அதனால் தேவனையும் அவரது இரட்ச்சிப்பையும் அறிந்து கொள்கின்றார்கள்.

அப்போஸ்தலர்களில் ஒருவராகிய பேதுரு, கர்த்தரை நோக்கி, ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவ வசனங்கள் உம்மிடத்தில் உண்டு. நீர் ஜீவனுள்ள தேவனுடையகுமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்று அறிக்கைபண்ணினார்.

'நித்தியஜீவ வசனங்கள்' அவை என்றென்றும் நித்தியமானவை. அவை இன்றும் இனிவரும் நாட்களிலும், இவ்வாழ்வுக்குப் பின்பும் அவை நித்தியமானவை. அவை கிரியைகளை நடப்பிக்கின்றவை. அவை குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயுள்ளது.

உம்முடைய நீதி நியாயங்களை நான் கற்றுக்கொள்ளும்போது, செம்மையான இருதயத்தால் உம்மைத் துதிப்பேன் என்றும் திரளான

செல்வத்தில் களிகூருவதுபோல, நான் உமது சாட்சிகளின் வழியில் களி கூருகிறேன் என்று சங்கீத புத்தகத்திலே அவரது சாட்சிகளைக் குறித்த மேன்மையைக் காண்கின்றோம்.

தேவனுடைய வழிகள் உத்தமமானவை. அவர் மனிதருக்கு நன்மையை செய்கின்றவராயுள்ளார். வருத்தப்பட்டுப்பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல் லாரும் என்னிடத்தில்வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தரு வேன் என்று வாக்களித்த இயேசு இளைப்பாறுதல் தந்து வழிநடத்துகின் றவராய் இருக்கின்றார்.

"கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா. கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா. நீங்கள் அதிகாலையில் எழுந்து, நேரப்பட வேலையிலே தரித்து, வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா, அவரே தமக் குப் பிரி யமானவனுக்கு நித்திரை அளிக்கிறார். இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின்கனி அவரால் கிடைக்கும் பலன். வாலவய தின் குமாரர் பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிரு க்கிறார்கள். அவைகளால்தன் அம்பறாத்தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான், அவர்கள் நாணமடையாமல் ஒலிமுகவாசலில் சத்துருக்க ளோடே பேசு வார்கள்." என்று தேவனின் ஆசீர்வாதத்தின் மேன்மையைக் காண்கிறோம்.

தேவனின் ஆசீர்வாதம் எம்மை ஒருபோது வெட்கப்பட்டு போகவிடுவதி ல்லை. அவரை நோக்கிப் பார்த்தவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டு போன தில்லை. மாறாக அவர்கள் பிரகாசமடைந்தார்கள்.

பிரியமான சகோதரனே சகோதரியே,

வழிகாட்டும் தேவனிருக்கின்றார். அவர் பாதுகாத்து உயர்த்துகின்றவர். வாழ்வில் ஆறுதலையும் நம்பிக்கையையும் தந்து மகிழ்ந்து வாழ செய் பவராயுள்ளார். குருடரை அவர்கள் அறியாத வழியிலே நடத்தி, அவர்க ளுக்குத் தெரியாத பாதைகளில் அவர்களை அழைத்துக் கொண்டு வந்து, அவர்களுக்கு முன்பாக இருளை வெளிச்சமும், கோணலைச் செவ்வையு மாக்குவேன், இந்தக்காரியங்களை நான் அவர்களுக்குச் செய்து, அவர்க ளைக் கைவிடாதிருப்பேன் என்று சொன்ன தேவன் உண்மையுள்ளவர்.

**எம்மோடு கூட ஜெபிக்க விரும்பினால் ஞயிறு காலை 10:00 மணிக்கு தேவ ஆராதனையில் கலந்து கொள்ளும்படி உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.**

## கிருபையின் கூடார அப்போஸ்தல சபை

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

# பேரொளி பிரகாசிக்கட்டும்

ஒரு சமயம், இயேசு காணிக்கைப்பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, ஜனங்கள் காணிக்கைப்பெட்டியில் பணம் போடுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார். ஐசுவரியவான்கள் அநேகர் அதிகமாய்ப் போட்டார்கள். ஏழையான ஒரு விதவையும் வந்து, ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள். அப்பொழுது அவர் தம்முடைய சீஷரை அழைத்து, காணிக்கைப்பெட்டியில் பணம்போட்ட மற்றெல்லாரைப்பார்க்கிலும் இந்த ஏழை விதவை அதிகமாய்ப் போட்டாளென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்து எடுத்துப்போட்டார்கள் இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள் என்றார்.இந்த உலகத்தின் அளவுகோலின்படி, ஏழைகளின் காணிக்கைகள், எவ்வளவு சிறியதாக இருந்தாலும், மனப்பூர்வமாய் கொடுக்கின்றவர்களின் காணிக்கைகள், தேவனுடைய பார்வையிலே விலையேறப்பெற்றதாக இருக்கின்றது என்பதை இயேசுதாமே, இந்த சம்பவத்திலே, தெளிவுபடுத்தி காண்பித்திருக்கின்றார். (மாற்கு 12:41-44, 2 கொரிந்தியர் 9:7)

மேலும் இயேசு, ஊழியர்களை அனுப்பும் போது, பணப்பையையும் சாமான் பையையும் பாதரட்சைகளையும் கொண்டுபோகவேண்டாம் வழியிலே ஒருவரையும் வினவவும் வேண்டாம். ஒரு வீட்டில் பிரவேசிக்கிறபோது: இந்த வீட்டுக்குச் சமாதானம் உண்டாவதாகவென்று முதலாவது சொல்லுங்கள். சமாதான பாத்திரன் அங்கே இருந்தால், நீங்கள் கூறின சமாதானம் அவனிடத்தில் தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடத்திற்குத் திரும்பிவரும். அந்த வீட்டிலேதானே நீங்கள் தங்கியிருந்து, அவர்கள் கொடுக்கிறவைகளைப் புசித்துக் குடியுங்கள் வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான் என்று கூறினார். (லூக்கா 10:4-7).

பூமியும் அதன் நிறைவும், அதன் குடிகளும் கர்த்தருடையது. எல்லா உயிரினங்களையும் போஷிக்கின்றவர் அவரே. (சங்கீதம் 104:27, 136:25, 147:9, மத்தேயு 6:25-34). இந்த கட்டுரையை எழுதும் அடியேனையும் என் குடும்பத்தையும், நான் வேலைபார்க்கும் காரியத்தின் வழியாக தேவன் போஷிக்கின்றார். தேவனை அறியாத அவர்கள், தாங்கள் பொருந்தின கூலியை குறித்த நாளிலே கொடுக்கின்றார்கள். இது தேவனுடைய ஈவு. அவர்கள் பொருந்தின கூலியை கொடுக்காவிட்டால், அதை விசாரிப்பதற்காக அரசாங்கத்தினால் சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இதுவும் தேவனுடைய ஈவு. தேவன் தம்முடையவர்களின் தேவைகளை பல வழிகளிலே சந்திக்கின்றார். “வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்” என்று கூறி, தம்முடைய ஊழியத்திற்கு பிரத்தியேகமாக பிரிக்கப்பட்டவர்கள், தம்முடையவர்கள் எங்கள் வழியாக, மனப்பூர்வமாக போஷிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றார். எனவே நாங்கள் எங்கள் தசம பாகம் காணிக்கைகள் வழியாக, தேவன் தந்த இந்த கனமுள்ள பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். இது தேவனால் எங்களுக்கு கொடுக்கப்பட்ட சிலாக்கியம். அதை முறுமுறுப்போடு செய்வோமாக இருந்தால், தேவன் அதில் பிரியப்படுகின்றவர் அல்லர். அப்படியாக நியமிக்கப்பட்ட நாம், அவருடைய ஊழியர்களை போஷிக்காத இடத்து, தேவன் தாமே மற்றய மனிதர்கள் வழியாக போஷிப்பார். மிருகங்களை அனுப்பி போஷிப்பார் (1 இராஜாக்கள் 17:5). தேவதூதர்களை

அனுப்பிப் போஷிப்பார் (1 இராஜாக்கள் 19:7). வானத்தை திறந்து, தூத ர்களின் உணவை அனுப்புவார். இயற்கையை மாற்றி காற்றுக்களை அனுப்பி காடைகளை கொண்டு வருவார் (எண் 11:31). ஏழைகளை ஆய த்தப்படுத்துவார் (1 இராஜாக்கள் 17:9). எனவே, தேவனோடு எதிர்த்து நிற்கமுற்படாதிருங்கள். தேவனுடைய வார்த்தைக்கு கீழப்படிந்தால், அது எங்களுக்கு பெரிதான ஆசீர்வாதம். தேவனுடைய வார்த்தைக்கு எதிராக கேள்விகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்துகின்றவன், அதற்குரிய விளைவை கர்த்தருடைய நாளிலே பெற்றுக் கொள்வான்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே, ஒரு சமயம், யூத மதத்தலைவர்க ளை நோக்கி: நீங்கள் சிறிய காரியத்திலும் தசமபாகம் (பத்தில் ஒன்றை) செலுத்துகின்றீர்கள் ஆனால் வேத பிரமாணங்களிலே உள்ள விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள். நீதி, இரக்கம் விசுவாசம் ஆகிய இவைகளையும் செய்ய வேண்டும், தசமபாகத்தையும் விடாதிருக்கவேண்டும் என்று கூறி னார். (மத்தேயு 23:23) அதாவது, தசமபாக காரியங்களைப்பற்றிப் பேசு வதும், நிறைவேற்றுவதும் அவசியம், ஆனால் இன்னும் மேன்மையான காரியங்களும் உண்டு. இருதயங்களை ஆராய்ந்து பார்க்கின்றவர், மனி தர்களுடைய எண்ணங்களை அறிந்திருக்கின்றார். நீங்கள் கொடுக்க விரும்பினால், தேவ ஆசீர்வாதத்தை பெறும்படியாக மனப் பூர்வமாக தச மபாக காணிக்கைகளை கொடுங்கள். எனவே உங்கள் வாழ்நாட்களை தசமபாகம் காணிக்கைகளை குறித்து பேசுவதிலும் தர்க்கிப்பதிலும் விர யப்படுத்தாதிருங்கள்.

தசம பாகம், காணிக்கைகளை குறித்து இன்று சிலர், பலவிதமான குழ ப்பங்களையும் கிளர்ச்சிகளையும் எழுப்பி வருகின்றார்கள். அவர்களைக் குறித்து தர்க்கிப்பதினால் வரும் பலன் அற்பமானது. ஒரு விடயத்தைக் குறித்து உங்கள் மனதில் குழப்பம் ஏற்பட்டால், உங்களைத் தாழ்த்தி, 'இந்த காரியம் எனக்கு குழப்பமாக இருக்கின்றது' என உங்கள் விண் ணப்பத்தை தேவனுக்கு தெரியப்படுத்துங்கள், சகல சத்தியத்திலும் எங்களை வழிநடத்தும் தேவ ஆவியானவர்தாமே காரியங்களை உங் களுக்கு தெளிவுபடுத்துவார்.

தம்முடைய சீஷர்களைவிட்டு பரலோகத்திற்கு செல்லும் வேளை வந்தபோது, இயேசு தம்முடையவர்களை நோக்கி: நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆகவே, எந்த மனித சித்தாந்தமும், கொள்கைகளும், குழப்பங்களும், தேவனு டைய அநாதி திட்டத்தை தடை செய்ய முடியாது. தேவன், தமக்கு கீழ்ப்படியும் தம்முடைய பிள்ளைகளோடு இருந்து, அவர்கள் வழியாக தம்முடைய திருச்சித்தத்தை இந்த பூவுலகத்திலே நிறைவேற்றி முடிப்பார்.

மேலும் எங்களுக்கு கொடுக்கப்பட்ட தேவ ஞானத்தின்படி சற்று இந்த காரியங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

ஒரு மனிதன், தன் இளவயதின் நாட்களிலே, தன் வாழ்க்கையை தேவனுடைய பணிக்கென்று முழுமையாக அர்ப்பணித்தான். மெய்விவாக வாழ்க்கையை துறந்து, துறவறம் பூண்டுகொண்டான். மிகவும் எளிமை

யான வாழ்வு முறையைத் தெரிந்து கொண்டான். தன்னுடைய பெல த்தின்படி, தானறிந்த ஏழை எளியவருக்கு பொருளாலும் சேவையினாலும் கருத்தோடு உதவி வந்தான். அவன் தனக்கென்றோ, தன்னுடையவ ர்களுக்கென்றோ இந்த உலகம் தரும் சுகபோகத்தை தேடி வைக்கா மல், பூரண வயதிலே, தன் பூலோக பணியை முடித்து, இந்த உலகத் தைவிட்டு கடந்து சென்றான். இது ஒரு பிரத்தியேகமான அழைப்பைப் பெற்ற மிஷனரியின் வாழ்க்கையாயிருக்கின்றது.

இப்படிப்பட்ட திருப்பணியாளர்கள், கிறிஸ்துவின் நற்செய்தியின் நிமித்தம், அநேக உபத்திரவங்களை சகித்து, பல தியாகங்களை செய்து, கடும் இன்னல்கள் மத்தியிலே, அநேக நன்மைகளை சமுதாயத்திற்கு செய் தார்கள். எளிமையான வாழ்க்கை முறையை தெரிந்து கொண்ட இவ ர்கள், சில வேளைகளிலே ஆராதனைக்காக, மரங்களுக்கு கீழும் அல் லது வீடுகளிலும் கூடிக் கொள்வார்கள். மருத்துவமனைகள் இல்லாத இடங்களிலே மருத்துவ மனைகளை அமைத்தார்கள், பாடசாலைகள் இல்லாத இடத்தில் பாடசாலைகளை அமைத்தார்கள். அநாதைகள் இரு க்கும் இடத்தில், அநாதை மடங்களை அமைத்தார்கள். இப்படிப்பட்டவர் களை பொதுவாக மிஷனரிகள் என்று அழைப்பார்கள்.

இவர்கள் அருமையான தேவ சாட்சிகள். தமது சுகபோகங்களை துற ந்த அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை. மேற்குறிக்கப்பட்ட மனிதன் போல யாவரும் இருந்துவிட்டால் நல்லது என்று மனிதர்கள் சிந்திப்பதுண்டு. வேறு சிலர் யாவரும் அப்படியாகத்தான் இருக்க வேண்டும் என்றும் திட்டமாக கூறுகின்றார்கள். எளிமையான வாழ்க்கைமுறை மிகவும் நல்லது. உண்ணவும் உடுக்கவும் இருந்தால் போதும் என எந்த நிலை யிலும் திருப்த்தியாக இருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், நாங்கள் கிறிஸ்துவின் சரீரத்தின் வெவ்வேறு அவயவங்களாக இருக் கின்றோம் என்பதை ஒரு போதும் மறந்து விடக்கூடாது. (1 கொரி 7:6-7)

எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா? எப்படியெ னில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம், ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கி றது. அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார். நீங்களே கிறிஸ்து வின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள். (1 கொரி ந்தியர் 12:1-31, 7:7-9)

இன்று சில மனிதர்கள் சபையையும் அதன் ஒழுங்கு முறைகளையும் குறித்து தப்பான அபிப்பிராயம் கொண்டிருக்கின்றார்கள். சபைக் கட் டிடம் அவசியமில்லை, அபிஷேகிக்கப்பட்ட ஊழியர்கள் தேவையில்லை, தசமபாகம் காணிக்கைகளை சபைக்கு கொடுக்கத் தேவையில்லை என்று பலரை குழப்பிவருகின்றார்கள். நீங்கள் இப்படிப்பட்ட தர்க்கங்க ளில் உங்கள் நேரத்தை விரயப்படுத்தாமல், பிதாவாகிய தேவனின் சித்தத்தை உங்கள் வாழ்வில் நிறைவேற்றும்படியாய், உங்கள் மனம் மறுரூபமாக்கப்படும் விடயங்களிலே முன்னேறிச் செல்லுங்கள். நேர த்தை ஞானமாக பயன்படுத்துங்கள்.

தேவன் தம்முடைய பணிக்கென்று ஊழியர்களை நியமித்திருக்கின்றார், ஆனால் ஆங்காங்கே போலியான ஊழியர்களும் இருக்கின்றார்கள்.

தேசங்களில் நீதியை நடப்பிக்க நியமிக்கப்பட்டவர்களின் மத்தியிலும் ஆங்காங்கே பாரபட்சமும் அநீதியும் செய்கின்றவர்கள் இருக்கின்றார் கள். மாணவர்களை முன்னேற்றும்படி அயராது உழைக்கும் ஆசிரிய ர்கள் மத்தியிலும் குறிப்பிட்ட ஒரு சில ஆசிரியர்கள் மாணவர்களுடன் தகாத முறையில் நடந்து கொள்கின்றார்கள். கருப்பொருளாவது துஷ் பிரயோகங்கள் இந்த உலகத்திலே நடைபெற்று வருகின்றது. ஏனெனில் இந்த உலகம் இருளில் இருக்கின்றது. நாங்களோ அந்த இருளிலே மாண்டு போகாதபடி, தேவனுடைய பேரொளி எங்கள் மேல் உதித்திரு க்கின்றது. எனவே அந்த பேரொளி இந்த இருள் நிறைந்த உலகிலே பிரகாசிக்கட்டும்.

சில ஊழியர்கள் வேலை செய்து அதனால் வரும் ஊதியத்தினால் தங் கள் தேவைகளை நிறைவேற்றுகின்றார்கள். வேறு சிலர், சபையினா லும், வேறு அமைப்புக்களினாலும் போஷிக்கப்படுகின்றார்கள். பூமியும் அதன் நிறைவும், அதன் குடிகளும் கர்த்தருடையது. இவை யாவும் கர்த்தருடைய ஈவு. இதைக் குறித்து எந்த மனிதனுக்கும் மேன்மை பாராட்ட இடமில்லை. (1 தெச 2:9, பிலிப்பியர் 4:14-18)

அனுப்பப்பட்ட அந்த மிஷனரி, தான் அனுப்பப்பட்ட நோக்கத்தை நிறை வேற்றி இந்த உலகத்தைவிட்டு கடந்து சென்றார். ஆதிச் திருச்சபை யின் நாட்களிலிருந்து, இன்றுவரை, சபைகள் வழியாக அநேக மிஷன ரிகள் அனுப்பப்பட்டு வருகின்றார்கள். இவர்களை உருவாக்கி அனுப்பும் படி, தேவன்தாமே பல அமைப்புக்களுக்கு அனுக்கிரகம் செய்திருக் கின்றார். பாடசாலைகளில், இறைகல்வியை தடைசெய்து வரும் இக் காலத்திலே, சிறுவர்களுக்கு முறைப்படி வேதபாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும். வாலிபர்கள் எதிர்நோக்கும் சவால்களை மேற்கோள்ள அவர் களுக்கு வழிகாட்டிகள் அவசியம். இவை யாவும் இன்று சபை வழியா கவும், வேதாகமக் கல்லூரிகள் வழியாகவும் போதிக்கப்பட்டு வருகின் றது. இந்த அமைப்புகளில் இருக்கும், ஊழியர்களும் விசுவாசிகளும், ஆசிரியர்களும், மாணவர்களும், கொடுக்கப்பட்ட சலுகைகளை பிரயோ ஜனப்படுத்திக் கொண்டால், அதற்குரிய நீதியின் பலனை அறுப்பார்கள். கொடுக்கப்பட்ட சலுகைகளை துஷ்பிரயோகம் செய்யும் ஊழியர்களும் விசுவாசிகளும், ஆசிரியர்களும், மாணவர்களும், கர்த்தருடைய நாளிலே அதற்குரிய தண்டனையைப் பெறுவார்கள். சந்தேகம் ஏதுமில்லை. எனவே துஷ்பிரயோகங்களிலே, கண்களை வைத்து, அதை விமர்சிப்பதில் உங் கள் வாழ்நாட்களை வீணாக்காதிருங்கள். நாட்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுங்கள். இருளில் பிரகாசிக்கும் சுடர்களைப் போல, உங்கள் பேரொளி இந்த உலகத்தில் வீசட்டும்.

அநியாயம் செய்கின்றன் இன்னும் அநியாயம் செய்யட்டும். பரிசுத்தமா குகின்றவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். நாங்கள் நியாயாதிப திகளாக அழைக்கப்படவில்லை. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே நீதியு ள்ள நியாயாதிபதி. அவர் வரும் நாளிலே அவனவனுடைய கிரியை களுக்கு தக்க பலனை அவனவனுக்கு கொடுப்பார்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துதாமே உங்கள் மேல் பேரொளியை பிரகாசி க்கப் பண்ணுவாராக! ஆமேன்!

# விழித்திருங்கள்

**பிரசங்கக் குறிப்புக்கள்** - போதகர் ரஞ்சிற் கொன்ஸ்ரன்ரைன்

**[IF YOU WOULD LIKE TO LISTEN TO THE FULL VERSION OF THIS MESSAGE IN ENGLISH OR TAMIL, FOLLOW THE LINK THAT IS PROVIDED AT THE END THIS SERMON NOTES]**

## பிரதான வசனம் : மாற்கு 10:17-25

நாங்கள் தேவனுடைய பார்வையிலே விசேஷித்தவர்களாக இருக்கின்றோம். ஆகையால் நாங்கள் விழிப்புள்ளவர்களாக வாழ வேண்டும். நாங்கள் ஏன் விழிப்புள்ளவர்களாக வாழவேண்டும்? நாங்கள் எந்த விடயங்களிலே அதிக விழிப்புடன் காணப்பட வேண்டும்?

தேவனை அறியாத மனிதர்கள், தங்கள் ஆசை இச்சைகளை நிறைவேற்றும்படி, உலகத்தோடு அழிந்து போகும் காரியங்களிலே தங்கள் வாழ்நாட்களை செலவிடுகின்றார்கள். நாங்கள் அவர்கள் வாழ்க்கையின் போக்கின்படி எங்கள் வாழ்க்கையை வாழ முடியாது. ஏனெனில், தன் மாம்சத்திற்கென்று (தங்கள் ஆசை இச்சைகளை நிறைவேற்றும் இந்த உலகத்திற்குரிய காரியங்கள்) விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான். நாங்கள் செய்கின்ற காரியங்கள், இவை தேவனுக்குரியதாக இருந்தால், தேவனால் நித்திய ஆசீர்வாதத்தை பெறுகின்றவர்களாக இருப்போம்.

மனிதர்கள் தங்கள் பெயர்களின் முன்னாலே எந்த பட்டத்தை போட்டுக் கொண்டாலும், பரிசுத்தம் என்றால் என்ன என்று எந்த மனிதர்களாலும் தெளிவாக விளக்கிக் கூறமுடியாது. இயேசு பரிசுத்தராகவே இருக்கின்றபடியால், அவர் பரிசுத்தத்தை குறித்துத் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார். உலகிலே, இன்றைய நாட்களிலே பலவிதமான சமுதாய சீர்கேடுகள் நடைபெற்று வருகின்றன. அவைகள் இப்போது சில ஆலயங்களிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. அசுத்தங்களை பரிசுத்தம் என்று ஏற்றுக்கொள்ளுகின்றவர்கள் மத்தியிலே நீங்கள் தரித்திராதிருங்கள். ஆதியிலிருந்து, தேவனுடைய பரிசுத்தத்தில் எந்த சமரசமும் இல்லை. எனவே எங்கள் ஆவி ஆத்துமா சரீரம் யாவும் குற்றமற்றதாக காணப்படவேண்டும். எனவே, அசுத்தமானவைகளை குறித்து விழிப்புள்ளவர்களாக இருங்கள். மோசம் போகாதிருங்கள், கர்த்தர் தம்மை பரியாசம் பண்ண விடமாட்டார். மனிதன் எதை விதைக்கின்றானோ அதையே அறுப்பான்.

கர்த்தராகிய இயேசுவை தேடி வந்தவர்கள் யாவரும் பிரகாசம் அடைந்தார்கள். துக்கத்தோடே வந்தவர்கள், சந்தோஷத்தோடே திரும்பிப் போனார்கள். ஒரு சமயம், மிகுந்த ஆஸ்தியுள்ள ஒரு வாலிபன் இயேசுவிடம் வந்தான். தேவ பிரமாணங்களையெல்லாம் தன் சிறு வயதுமுதல் கைக்கொண்டு வருகின்றேன் என்று கர்த்தர் முன்னிலையில் உறுதியாக அறி

க்கையிட்டான். அப்படி அவன் வாழ்ந்திருந்தும், ஏன் அவன் இயேசுவிடம் வந்து நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள (பரலோகம் செல்ல) நான் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்க வேண்டும்? ஏனெனில், அவன் தன்னிடத்திலே ஏதோ குறை இரு ப்பதை உணர்ந்து கொண் டான், எனவே அவன் அதை அறிந்து கொள்ளும்படியாய் எதிர்பார்ப் போடு இயேசுவிடம் வந்தான். இயேசு அவனிடத்தில் அன்புகூர்ந்தார். ஆதலால், உலக ஐசுவரியத்தின்மேல் அவனு க்கு இருந்த ஆசையை அவனுக்கு தெளிவு படுத்தினார். உன் ஐசுவரியத்தையெல்லாம் விற்று ஏழைகளுக்கு கொடுத்துவிட்டு என்னைப் பின் பற்றிவா என்ற அழைப் பைக் கொடுத்தார். ஆனால் அவன் தேவனை பின்பற்றுவதைப்பார்க்கி லும் ஐசுவரியத்தோடு இந்த உலகில் இருப்பதையே விரும்பினபடியால், அதாவது ஐசுவரியத்தை விட்டுவிட அவனுக்கு மனதில்லாதிருந்ததால், இயேசுவின் வார்த்தையைக் கேட்டு, மனமடிந்து, துக்கத்தோடே போய் விட்டான்.

வேடன் ஒரு கண்ணியை (பொறியை) வைத்திருந்தால், யார் அதில் அகப்படாமல் தப்பமுடியும்? அங்கே கண்ணி இருக்கின்றது என்பதை அறிந்து, அதற்கு எச்சரிக்கையாயிருக்கின்றவனே தன்னை பாதுகாத்துக் கொள்வான்.

இயேசு சொன்னார்: உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறி யினாலும் லௌகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த (நியாயத்தீர்ப்பின்) நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர்மேலும் அது ஒரு கண்ணியைப்போல வரும்.

அந்த வாலிபனுடைய இருதயம் இந்த உலகக் கவலைகளினால் பாரம டைந்திருந்ததால், அவன் தன் செல்வத்தை குறித்த கரிசனையுள்ளவ னாக இருந்தான். அதாவது, அந்த ஆசை அவனை பற்றிக் கொண்டிரு ந்தது.

கர்த்தர் சொன்னார்: ஒருவன் தேவனுக்கும் உலகப் பொருட்களுக்கும் ஊழியம் செய்ய முடியாது. ஒருவன் இந்த உலக பொருட்கள் மேல் கண்களை வைத்து, அதை நாடித் தேடுபவனாக இருந்தால், கர்த்தரு டைய நாள் திடீரென வரும் போது, அவன் அந்த நாளுக்கு ஆயத்த முள்ளவனாக இருக்காததால் அவன் அழிவை கண்டு கொள்வான்.

எங்களுடைய வாழ்க்கையிலும் தேவன் பல உலக ஆசீர்வாதங்களை கட்டளையிட்டிருக்கலாம். அதனால் நாங்கள் அவைகளை பற்றிக் கொண்டு, அவைகளை நாடித் தேடி அவைகளுக்காக வாழும்படி எங் களை ஒப்புக் கொடுக்காதபடி விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். தேவனுடைய சித்தத்தை எங்கள் வாழ்வில் நிறைவேற்றும்படி விழி ப்புடன் செயற்படவேண்டும்.

[இந்த தேவ செய்தியின் முழுமையான ஒலிப்பதிவை பின்வரும்
இணையத் தளத்தில் (**INTERNET WEBSITE** இல்)
தமிழ் ஆங்கில மொழிகளில் கேட்கலாம்.]

# தேவ மாளிகை

இந்த உலகிலே ஓட்டப் பந்தையத்திலே ஓடுகின்றவர்கள், தங்கள் மாம்ச கண்களால் காணும் இலக்கை நோக்கி ஓடுகின்றார்கள். வெற்றி பெறுபவர்களுக்கு கிடைக்கும் பதக்கம் என்ன என்பதையும், ரொக்கப் பணம் எவ்வளவு பெறுமதியுடையதென்பதையும் அறிந்திருக்கின்றார் கள். நாங்களோ விசுவாசக் கண்களால் மாத்திரம் காணக்கூடிய, பரலோகத்தை நோக்கி ஓடுகின்றோம். வெற்றி பெறுகின்றவர்களுக்கு கிடைக்கும் கைமாறு ஈடு இணைய ற்றது என பரிசுத்த வேதாகமம் கூறு கின்றது. ஆனால் அந்த இணையில் லாத பரிசுப் பொருளின் மகிமையை மனிதனுடைய மொழியினால் வர்ணி க்க முடியாது. சென்றடைய வேண்டிய இலக்கை ஒருவரும் தங்கள் மாம்ச கண்களால் காண முடியாது. எனவே, இதைக் குறித்து விசுவாசமற்றவர்கள், இந்த பரம பந்தையப் பொருளின் அழைப்பை அசட்டை செய்கின்றார்கள். இந்த இரகசியம் உலகத்தாருக்கு பைத்தியமாக தோன்றுகின்றது. நெகேமியா என்னும் தேவ ஊழியருடைய நாட்களிலே, எருசலேமின் அலங்கத்தை கட்டும் வேளையிலே, தோபியா சன்பல்லாத்து என்பவர்கள், யூத ஜனங் களுக்கு பெரும் இடறலாக இருந்தார்கள். ஜனங்கள் சிறையிருப்பிலி ருந்து திரும்பி, நன்மையான காரியத்தை செய்யும்படி கட்டுமானப் பணியை ஆரம்பித்தபோது, அவர்கள் கேடு செய்ய முனைந்தார்கள். கட்டுகின்றவர்கள் சோர்ந்து போகும்படியாய், அவர்களைப் பார்த்து நகைத்தார்கள். அந்த வேளையிலும், நெகேமியாவும், அவருடன் சேர் ந்த ஜனங்களும், தங்களை நகைக்கின்றவர்களின் வார்த்தைகளை ஒரு பொருட்டென்று எண்ணாமல், தாங்கள் செய்ய வேண்டிய வேலையில் கண்ணும் கருத்துமாக இருந்தார்கள். நாங்களும் தேவனுடைய ஆவிக்குரிய மாளிகைகளாக கூட்டிக் கட்டப்பட்டு வருகின்றோம். பலர் உங்களை நகைக்கலாம் அல்லது பகைக்கலாம். உங்கள் விசுவாசம் தளர்ந்து போகும்படியான வார்த்தைகளை பேசலாம். நெகேமியாவை யும் அவரோடு இருந்தவர்களையும் போல, நீங்களும் உங்கள் விசுவா சத்தில் உறுதியாக நில்லுங்கள். உலகத்தாரின் வீண் பேச்சுகளுக்கு இடங்கொடாமல், கர்த்தருடைய நாளிலே, கறையற்றவர்களும் பிழை யில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படு ம்படி ஜாக்கிரதையாயிருங்கள்.

**1 கொரிந்தியர் 3:9**

**நீங்கள் தேவனுடைய பண்ணையும், தேவனு டைய மாளிகையுமாயி ருக்கிறீர்கள்.**

**ஜெபம்**: அன்புள்ள பிதாவாகிய தேவனே, காண்கின்ற உலகத்தில் மாயையான வாழ்க்கையில் சிக்கிக் கொள்ளாதபடி, கண்ணிகளுக்கு தப்பி, ஜீவ ஓட்டத்தை ஓடி முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவன் யுத்தம் செய்வார்

நெகேமியா என்னும் தேவ ஊழியனுடைய நாட்களிலே, அவர்கள் கட்டும் எருசலேம் மதில்களின் வேலை பெரிதும் விஸ்தாரமுமாயிருந்தது. பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து நெகேமியாவுடன் திரும்பி வந்த குறிப்பிடப்பட்ட ஜனங்கள், அலங்கத்தின்மேல் (மதில்கள்) சிதறப்பட்டு ஒருவருக்கு ஒருவர் தூரமாயிருந்து வேலை பார்த்து வந்தார்கள். சிதறி இருப்பதினால், பகைஞர் எதிர்க்கும் போது, அவர்களை மேற்கொள்வது கடினம். அதனால், அவர்கள் எவ்விடத்தில் எக்காளச் சத்தத்தைக் கேட்கின்றார்களோ, அவ்விடத்திலே வந்து, ஒன்றாய் கூடும்படியாய் முடிவெடுத்தார்கள். அவ்விடத்திலே “நம்முடைய தேவன் நமக்காக யுத்தம்பண்ணுவார்” என்று நெகேமியா கூறியிருந்தார். பிரியமானவர்களே, நாங்கள் செல்லும் சபையின் ஊழியங்கள் பரந்திருக்கின்றது. பலர் அந்த ஊழியத்தில் பங்கேற்கின்றார்கள். ஒவ்வொருவரும் தனிப்பட, அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்து வருகின்றபோதிலும், எங்கள் பிரதானமான நோக்கத்தை மறந்து விடக்கூடாது. எங்கள் பிரதான ஆசாரியர் யார் என்பதையும், எங்கள் பொதுவான எதிரி எவன் என்பதையும் நாங்கள் மறந்துவிடலாகாது. பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி, அவருடைய அன்பின் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவினுடைய ராஜ்யத்திற்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதே எங்கள் பிரதானமான நோக்கம். எங்கள் பிரதான மேய்ப்பர், மீட்பராகிய இயேசு கிறிஸ்து. எங்கள் பொதுவான எதிரி பிசாசானவன். அந்த எதிரி ஆதியிலிருந்து வஞ்சிக்கின்றவனாகவே இருந்து வருகின்றான். நாங்கள் தனித்து செயற்பட முயற்சிப்போமானால், சீக்கிரத்தில் வஞ்சிக்கப்பட்டு போவோம். நாங்கள் சரீரப்பிரகாரமாக, வேறு இடங்களில் ஊழியங்கள் செய்ய நேர்ந்தாலும், நாங்கள ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாக இருக்க வேண்டும். நாங்கள் ஆவியிலே ஒருங்கிசைந்து ஒன்றித்து இருக்கும் போது, தேவன் தாமே எங்களுக்காக யுத்தம் செய்வார்.

**நெகேமியா 4:20**

**நீங்கள் எவ்விடத்திலே எக்காளச் சத்தத்தைக் கேட்கிறீர்களோ அவ்விடத்திலே வந்து, எங்களோடே கூடுங்கள் நம்முடைய தேவன் நமக்காக யுத்தம்பண்ணுவார் என்றேன்.**

**ஜெபம்:** இரக்கத்தின் சிகரமாகிய தேவனே, ஐக்கியத்தின் மேன்மையை உணர்ந்தவர்களாய், எப்போதும் இசைந்த ஆத்துமாக்களாய் இருந்து உம்முடைய திருச்சித்தத்தை நிறைவேற்ற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஞான நன்மைகளின் பெருக்கம்

நாங்கள் ஆராதிக்க செல்லும் சபைகளிலுள்ள எங்கள் ஒன்றுகூடலை (ஐக்கியம், சபையை) நாங்கள் நேசிக்க வேண்டும். பொதுவாக சபையின் அங்கத்தவர்களாகிய நாங்கள் ஒவ்வொருவரும், எங்கள் சபைக்கு ஒரு வசதியான கட்டிடம் வேண்டும், ஒழுங்கான தளபாடங்கள் வேண்டும், தரமான ஒலிபெருக்கித் தொகுதி வேண்டும், மற்றும் வீடியோ மற்றும் கம்யூட்டர் சாதனங்கள் வேண்டும் என வாஞ்சிக்கின்றோம். இப்படிப்பட்ட வாஞ்சை தவறானது அல்ல. தேவனுக்கு சித்தமானால் அவர் அப்படியாக செய்வாராக! இவை யாவற்றின் மத்தியிலும், தேவனுடைய அநாதி தீர்மானத்தை மறந்து விடக்கூடாது. பொருளாதார வளர்ச்சி உண்டாகும் போது, நாங்கள் விரும்பிய பிரகாரமாக கட்டிடங்கள், சாதனங்களை கொள்வனவு செய்து கொள்ளலாம். இப்படியாக கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறியாதவர்களும், தங்கள் அந்நிய ஆராதனை முறைமைகளை இடாம்பீகரமான கட்டிடங்களிலே நடப்பிக்கின்றார்கள். நாங்கள் கிறிஸ்துவின் சரீரமாயும், தனித் தனியே அவயவங்களாயுமிருக்கின்றோம். அப்படியானால் எங்களிடத்திலே பெருக வேண்டிய காரியங்கள் என்ன? மறுரூபமாகும் கிறிஸ்தவனிடத்தில் பெருக வேண்டிய அன்பின் கிரியைகள் சிலவற்றைப் பார்ப்போம். “உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கள், ஆசீர்வதிக்கவேண்டியதேயன்றி சபியாதிருங்கள். சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கள் அழுகிறவர்களுடனே அழுங்கள். ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள்” (ரோமர் 12). இவை யாவற்றின் மையப்பொருள் “கிறிஸ்துவின் அன்பு” ஆகும். என்னத்தை உண்போம், என்னத்தை அணிவோம் என்று கவலைப்படாதிருங்கள் என்று இயேசு கூறினார். இவையெல்லாம் எங்களுக்குத் தேவை என்பதை பரமபிதா அறிந்திருக்கின்றார். அதே போல, சபையாக நாங்கள் கூடி வரும் போது, எங்களுக்கு தேவையானவைகளை தேவன் அறிந்திருக்கின்றார். ஒரு மனிதன் தன் சரீரத்திற்காக திருப்த்தியாக உண்டு, விதவித மாக உடுத்தியும், அவன் உள்ளான மனிதனில் பெலப்படாதிருந்தால் அவனுக்கு பிரயோஜனம் ஒன்றுமில்லை. எனவே, தனியாகவும், குடும்பமாகவும், சபையாகவும் ஆவிக்குரிய நன்மைகளில் பெருகுவோம்.

**கொலோசெயர் 3:1**

**நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள்.**

**ஜெபம்**: சகலமும் அறிந்தவரே, நீர் உம்முடைய குமாரனையே எங்களுக்காக தந்தவர், மற்ற யாவற்றையும் தர, தயை பெருத்தவராயிருக்கின்றீர், உம்முடைய சித்தப்படி ஞான நன்மைகளில் பெருக என்னை வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# திரளான சாட்சிகள்

தேவனைச் சார்ந்து,வெற்றி வாழ்க்கை வாழ்ந்த அநேக தேவ பிள்ளைகளை பரிசுத்த வேதாகமத்திலே காண்கின்றோம். அவர்களுடைய சாட்சியான வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்து, நாங்களும் அவர்களை பின்பற்றுவது எங்கள் ஆத்துமாவிற்கு நாங்கள் செய்யும் நன்மையாக இருக்கின்றது. இந்த உலகிலே அந்தந்த காலகட்டத்திற்குரிய சவால்கள் இருந்து கொண்டே வருகின்றது. நாம் சிறுவர்களாக இருந்த போது, எங்களை சூழ இருந்த வயதானவர்கள், காலம் மாறிப் போய்விட்டது என்று கூறுவதை கேட்டிருக்கின்றோம். அப்படிப்பட்ட அறிக்கையை நாங்கள் இன்று எங்கள் பிள்ளைகளுக்கு கூறுகின்றோம். இன்று கணணி ஊடக தொழில்நுட்பம் பெரிதான வளர்ச்சி கண்டிருப்பதால், இந்த சந்ததியினர், இருக்கும் இடத்திலே இருந்து கொண்டு தங்கள் அலுவல்களை மிகவும் துரிதமாக நடத்தி வருகின்றார்கள். ஆனாலும், பாவத்தின் அடிப்படைக் காரணி மாறிப் போகவில்லை. ஆதியிலே முதல் பெற்றோர் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல், பிசாசானவனின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்ததால் பாவம் செய்தார்கள். இந்த அடிப்படை காரணியாகிய "கீழ்ப்படியாமை" இன்று துரிதமாக செயல்ப்படுகின்றது. எனவே, பரிசுத்த வேதாகமத்திலுள்ள பாத்திரங்களை உற்று நோக்கிப் பார்த்து எங்கள் வழிகளை செம்மைப்படுத்திக் கொள்வது நல்லது. பாவம் செய்யாத மனுஷன் இல்லை, எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள் என வேதாகமத்திலே வாசிக்கின்றோம். எனினும், பரிசுத்த வேதாகமத்திலே, குறிப்பிடப்பட்டுள்ள சில பாத்திரங்கள், வெளியரங்கமான குற்றங்கள் ஏதும் செய்ததாக குறிப்பிடப்படவில்லை. வேறு சில தேவபிள்ளைகள், தங்கள் வாழ்நாட்களில் பல குற்றங்களை செய்தார்கள், ஆனால் தேவனுடைய சத்தத்தை கேட்டபோது மனம்வருந்தி, மனம்திரும்பி தேவ சத்தத்திற்கு கீழ்ப்படிந்தார்கள். ஆனால் சிலர், குற்றங்களை செய்த பின்பும், மனம்வருந்தி, மனந்திரும்புவற்கு பதிலாக, தங்கள் நிலையை நியாயப்படுத்த முயன்றார்கள். இவர்கள் தேவனுக்கு கீழ்ப்படியும் மனதில்லாதவர்கள். எனவே எங்களை சூழ்ந்திருக்கும் சாட்சிகளை பார்த்து, தேவனிடத்தில் இன்னுமாய் சார்ந்து கொள்வதையே நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

**எபிரெயர் 12:01**

**மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க**

**ஜெபம்**: அன்பின் தேவனே, எங்களை சூழ்ந்திருக்கும் சாட்சிகளை உற்று நோக்கி, உம்முடைய வார்த்தைக்கு எப்போதும் கீழ்ப்படிகின்ற வாழ்க்கை வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சாமுவேல் தீர்க்கதரிசி

சாமுவேல் என்னும் தேவ ஊழியர், அவருடைய தாயாரின் பொருத்தனையின்படி, பால் மறந்த நாளிலிருந்து, தேவ ஆலயத்திலே வளர்ந்து வந்தார். அந்நாட்களிலே, ஆசாரியனாக இருந்த ஏலி என்பவனின் பிள்ளைகள் துன்மார்க்கமாய் நடந்து, ஆலயத்திற்கு பலியிட வரும் ஜனங்களை துன்பப்படுத்தினார்கள். ஆதலால் அந்த வாலிபரின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் மிகவும் பெரிதாயிருந்தது. ஆனாலும், அந்த சூழ்நிலையிலும், சாமுவேலாகிய பிள்ளையாண்டான், கர்த்தருக்கு பணிவிடை செய்து, கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்துகொண்டார். அவர் உயிரோடிக்கும் நாளெல்லாம் இஸ்ரவேலரை நீதியாக நியாயம் விசாரித்து வந்த பெரும் தீர்க்கதரிசியாக இருந்தார். அவர் கிழவனும் நரைத்தவனுமானபோது ஜனங்களை நோக்கி: நான் யாருக்கு அநியாயஞ் செய்தேன்? யாருக்கு இடுக்கண்செய்தேன்? யார் கையில் பரிதானம் வாங்கிக்கொண்டு கண்சாடையாயிருந்தேன்? சொல்லுங்கள் அப்படியுண்டானால் அதை உங்களுக்குத் திரும்பக் கொடுப்பேன் என்றான். ஜனங்களோ, நீர் அப்படி ஒன்றுமே செய்யவில்லை, அதற்கு கர்த்தரும், இஸ்ரவேலின் ராஜாவுமாகிய சவுலும் சாட்சி என்று கூறினார்கள். பிரியமானவர்களே, சாமுவேல் என்னும் மனிதர், தேவ ஊழியத்திற்காக, சிறுவயதிலிருந்தே பிரத்தியேகமாக பிரித்தெடுக்கப்பட்டார். இவர் தேவனுக்கும் மனிதர்களுக்கும் உண்மையுள்ளவராக நடந்து வந்தார். இவர் எங்கள் யாவருக்கும் ஒரு அருமையான சாட்சி. சாமுவேல், தான் பின்பற்றி நடக்கும்படியாய், அவருக்கு முன்பாக ஆசாரிய ஊழியம் செய்து வந்த ஓப்னி, பினெகாசு என்பவர்கள் முன் உதாரணமாக இருக்கவில்லை. ஆனாலும் சாமுவேல் அவர்களின் தீமையை பற்றிக்கொள்ளாமல், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து வாழ தன்னை ஒப்புக் கொடுத்தார். சில வேளைகளிலே, எங்களுக்கு முன் உதாரணமாக இருக்க வேண்டியவர்கள் தவறிப்போனாலும், நாங்கள், சாமுவேலைப் போல தேவ வசனத்திற்கு கீழ்ப்படிந்து, தேவனுக்கு பிரியமான வாழ்க்கை வாழ வேண்டும்.

**1 சாமுவேல் 12:4**

**அதற்கு அவர்கள்: நீர் எங்களுக்கு அநியாயஞ் செய்யவும் இல்லை எங்களுக்கு இடுக்கண் செய்யவும் இல்லை ஒருவர் கையிலும் ஒன்றும் வாங்கவும் இல்லை என்றார்கள்.**

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, எங்கள் சூழ்நிலைகள் எதிரிடையாக இருந்தாலும், அவற்றைக் குறித்து முறுமுறுக்காமல், சாமுவேலைப் போல உம்முடைய வார்த்தைகளின் வழியில் வாழும்படி என்னை வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன்

திங்கள் | வைகாசி 6 | 📖 மாலை வாசகம் – யாத்திராகமம் 19:5

# சவுல் ராஜா

இஸ்ரவேலின் முதல் ராஜாவாக உயர்த்தப்பட்ட சவுல் என்னும் மனிதனின் வாழ்க்கையை சற்று தியானித்து, தேவனுடைய சத்தத்தை புறக்கணிக்கின்றவர்களின் முடிவை ஆராய்ந்து பார்ப்போம். சவுல் என்னும் வாலிபன், சமஸ்த இஸ்ரவேலுக்கும் முதல் ராஜாவாக ஏற்படுத்தப்பட்டான். இவன் ராஜாவாக ஏற்படுத்தப்படும்படி, இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் எந்த நன்மதிப்பையும், ஆதரவையும் பெற்றவன் அல்ல. தங்கள் முதல் ராஜா இவ்வண்ணமாக இருப்பான் என்று அவர்கள் அறியாதிருந்த வேளையிலே, தேவனாகிய கர்த்தர்தாமே சவுலை பிரித்தெடுத்து, இப்படிப்பட்ட கனத்திற்குரியவனாக்கினார். கர்த்தர் இவனை ஆசீர்வதித்தார், இவனுடைய ராஜ்யபாரம் ஸ்திரப்பட்டிருந்தது. எனினும், தான் இந்த நிலைக்கு எப்படி வந்தேன் என்பதை மறந்து, தேவனாகிய கர்த்தருடைய நியமங்களை அசட்டை செய்பவனாக இருந்தான். தேவனாகிய கர்த்தருடைய வார்த்தைக்கு எதிராக குற்றம் செய்த பின்பு, மனந்திரும்பி மன்னிப்பை பெற்றுக் கொள்வதற்கு பதிலாக, தான் செய்ததை நியாயப்படுத்த முயன்றான். அவன் தன் பார்வைக்குச் சிறியவனாயிருந்தபோது தன்னை இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவராக்கின கர்த்தரை மறந்து, அவரை புறக்கணித்தான். ஈற்றிலே, கர்த்தர் அவனை புறக்கணித்துத் தள்ளினார். பிரியமானவர்களே, தேவனாகிய கர்த்தர் தாமே, அற்பமான எங்களை, தம்முடைய குமாரனுடைய ராஜ்யத்திற்கு பங்காளிகளாகும்படி மகா பெரிதான அழைப்பை தந்திருக்கின்றார். இந்த அழைப்பு சவுல் என்னும் மனிதன், சமஸ்த இரஸ்வேலுக்கும் ராஜாவாக ஏற்படுத்தப்பட்டதைவிட அதி உன்னதமான அழைப்பு. எனவே சவுல் ராஜாவைப் போல நாங்கள் தேவனுடைய வார்த்தையை அற்பமாக எண்ணக் கூடாது. சிறிய குற்றம்தானே, அதைப் பிற்பாடு பார்க்கலாம் என்று நாட்களை விரயப்படுத்தும் போது, அந்த சிறிய தீமையான வித்து, சீக்கிரத்தில் வளர்ந்து, வாழ்க்கையில் பெரிதான தீங்கை உண்டு பண்ணிவிடும். எனவே, நாங்கள் சவுல் ராஜாவைப் போல், எங்களை உயர்த்திய தேவனை மறந்து விடாமல், எப்போதும் அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்க கற்றுக் கொள்ள வேண்டும்.

**1 சாமுவேல் 15:22**

கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ?

**ஜெபம்:** மனதுருக்கமுடைய தேவனே, உன்னதமான அழைப்பை பெற்ற நான், ஒரு போதும் உம் வார்த்தையை மறந்து போகாமல், கீழ்ப்படிந்து வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிரியமான தாவீது

தேவனாகிய கர்த்தர் சவுல் ராஜாவை தள்ளி, தாவீதை அவர்களுக்கு ராஜாவாக ஏற்படுத்தி, ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்துக்கு ஏற்றவனாகக் கண்டேன் எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் அவன் செய்வான் என்று அவனைக்குறித்துச் சாட்சியுங் கொடுத்தார். தாவீது என்னும் இளைஞன், தன்னுடைய தகப்பனுக்கு இருந்த கொஞ்ச ஆடுகளை மேய்த்து வந்தான். அந்த நாட்களிலே, கர்த்தர் அவனை வேறு பிரித்து, ராஜாவாக அபிஷேகம் செய்தார். தாவீது சமஸ்த இஸ்ரவேலுக்கும் ராஜாவாக பதவி ஏற்பதற்கு முன், தேவன் குறித்த காலம் நிறைவேறும் மட்டும், அநேக வருடங்கள், அவன் பொறுமையாக இருக்க வேண்டியதாயிருந்தது. அந்த நாட்களிலே, சவுல் ராஜா அவனை கொன்று போடும்படி தருணம் பார்த்துக் கொண்டிருந்தான். தாவீதிற்கு, சவுல் ராஜாவை கொன்று போடும்படியான சந்தர்ப்பம் கிடைத்த போதும், அவன் ராஜாவின் மேல் கைபோடவில்லை. பின்பு, சவுல் ராஜா யுத்தத்தில், அந்நியரால், கொல்லப்பட்ட போது மனவேதனையோடு அழுதான். இப்படியாக தாவீது, தேவனாகிய கர்த்தருக்கும், நாட்டிற்கும், ராஜாவுக்கும் விசுவாசமுள்ளவனாக இருந்து வந்தான். தாழ்விடங்களிலிருந்த தன்னை உயர்த்தின தேவனை நேசித்தான். சில வேளைகளிலே தேவனுக்கு எதிராக பாவம் செய்ததை உணர்ந்த போது, அல்லது தேவ ஊழியர்கள் அதை அவனுக்கு உணர்த்திய போது, தேவனுடைய பாதத்திலே தன்னைத் தாழ்த்தி, தன் குற்றங்களை ஏற்றுக் கொண்டு, மனந்திரும்புகின்ற இருதயமுள்ளவனாக இருந்தான். எங்களுடைய வாழ்க்கையிலும், தாவீதைப் போல, தேவன் முன் குறித்ததை நிறைவேற்றும் வரைக்கும், தேவனுடைய நேரத்திற்காக காத்திருக்க வேண்டும். எங்களை கடுமையாக நடத்துபவர்களை நாங்கள் நியாயந்தீர்க்க முற்படக்கூடாது. எல்லாவற்றிற்கும் மேலாக, எங்கள் குற்றங்களை நாங்கள் உணரும் போது அல்லது இன்னுமொருவர் வழியாக உணர்த்தப்படும் போது, பாவங்களை நியாயப்படுத்த முயலாமல், கர்த்தருடைய பாதத்தில் எங்ளை தாழ்த்தி, அவற்றை அறிக்கையிட்டு விட்டுவிட வேண்டும். கர்த்தரே எங்கள் பங்கு என்பதின்படி அவருக்கே முதலிடம் கொடுக்க வேண்டும்.

**சங்கீதம் 16:5**

**கர்த்தர் என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமானவர் என் சுதந்தரத்தை தேவரீர் காப்பாற்றுகிறீர்.**

**ஜெபம்:** அரவணைக்கும் தேவனே, என் வாழ்க்கையில் நான் தவறும் போதும், உயர்வான நேரத்திலும், தாழ்வான நேரத்திலும் உம் பாதத்தில் என்னை அர்ப்பணித்து வாழ என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆசீர்வாதத்தின் வழி

ஆபிரகாம் என்னும் மனிதனை தேவனாகிய கர்த்தர் அழைத்த போது, அந்த அழைப்போடு, தேவன்தாமே ஆபிரகாம் வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்வதற்கான வழிமுறைகளையும் ஏற்படுத்திக் கொடுத்தார். கர்த்தர் ஆபிராமை நோக்கி: "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ" என்றார். அவன் கீழ்ப்படிந்தான். விசுவாசத்திற்கு தந்தையாக வரும்படிக்கு அவன் என்ன செய்ய வேண்டும் என்பதை ஆரம்பத்திலேயே சொல்லிக் கொடுத்தார். உன்னதமான அழைப்பை பெற்ற நாமும், அந்த அழைப்போடு, வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை, கர்த்தரை சார்ந்து வாழும் வாழ்க்கை வாழும்படிக்கு, தேவனாகிய கர்த்தர் தாமே, அதற்குரிய வழிமுறைகளையும் சொல்லி தந்திருக்கின்றார். "நான் ஏன் என் தேசத்தையும், இனத்தையும், தகப்பன் வீட்டையும் விட்டு செல்ல வேண்டும்" என்று ஆபிரகாம் கேட்டிருக்கலாம். ஆனால், அவன் தேவன் பேரில் வைத்த விசுவாசத்தினால், எது என் வாழ்க்கைக்கு அதி சிறந்தது என்பதை தேவன் ஒருவரே அறிவார் என்ற உறுதி ஆபிரகாமிடம் இருந்தபடியால், அவன் கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்தார். கர்த்தர் சர்வ வல்லமையுள்ளவர், அவர் எல்லாம் அறிந்தவர். எல்லாம் அவருடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கின்றது என்ற பல கூற்றுக்களை நாங்கள் அறிக்கையிடுகின்றோம். இப்படி அறிக்கையிட்ட நாம், அவர் ஒரு காரியத்தை செய்ய சொல்லும் போது, அதற்கு எதிராக பல கேள்விகளை கேட்போமாக இருந்தால், கர்த்தரைக் குறித்து சந்தேகம் அடைகின்றவர்களாக இருப்போம். எங்கள் உண்மையான நிலையையும், எங்கள் தேவையையும், அதற்குரிய பதிலையும் அறிந்தவர் தேவன் ஒருவரே. உன்னதமான அழைப்பை தந்தவர், நாங்கள் பரிசுத்த வாழ்வு வாழும்படியாய், இருக்கும் தடைகளை அகற்றும் வழிகளையும் சொல்லித் தருகின்றார். செல்லும் பாதையில், வரவிருக்கும் கண்ணிகளிலிருந்தும் தப்பித்துக் கொள்ளும் வழியையும் சொல்லித் தருகின்றார். அவருடைய வார்த்தையின் வெளிச்சத்தில் நடக்கின்றவன், இடறிப் போவதில்லை. அவனே நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்வான்.

**சங்கீதம் 119:105**

உம்முடையவசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, என் வாழ்வில் நித்திய மகிழ்ச்சியை அடையும் வழியை அறிந்தவர் நீர் ஒருவரே, அந்த வழியில் நான் உறுதியாய் நிற்கும்படிக்கு எனக்கு பெலன் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழைப்பை காத்துக் கொள்வோம்

மனிதர்கள் பல காரணங்களுக்காக ஒன்று கூடுகின்றார்கள். ஒரு சில நன்மைக் கேதுவானவைகளும், வேறு சில துர்ஆலோசனையை பிணைக்கின்றதற்கேதுவாகவும் இருக்கின்றது. பிரதான ஆசாரியர்கள் இயேசுவோடு கூட லாசருவையும் கொலைசெய்யும்படி ஒன்று கூடினார்கள். நீதியை நடப்பிக்க நியமிக்கப்பட்ட இவர்கள், அநீதியை நடப்பிக்கும்படியாய் துர்ஆலோசனையை செய்தார்கள். இயேசு பரலோகத்திற்கு எழுந்தருளிய பின்பு, அவர் உரைத்தபடியே, சீஷர்களில் ஏறக்குறைய நூற்றிருபதுபேர் கூடி வந்தார்கள். பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே கூடி வந்த போது, அந்நாளிலே பெரிதான திவ்விய நன்மை உண்டானது. இன்று நாங்களும் பல மட்டங்களிலே ஒன்றுகூடி வருகின்றோம். அந்நிகழ்வுகள், சபை ஆராதனை சார்ந்தவைகளாகவும், சபை நிர்வாகம் சார்ந்ததாகவும், ஊழியங்கள் சார்ந்ததாகவும், மற்றும் இதர நிகழ்சிகளாகவும் இருக்கின்றன. சில சந்தர்ப்பங்களிலே, விசுவாசிகள் மத்தியிலே வரும் கருத்து முரண்பாடுகளின் நிமித்தம், சிலர் மனமடிவடைந்து போகலாம். அவர்களை தேற்றும்படிக்கு நாங்கள் ஒரு சிலராக ஒன்று கூடலாம். இப்படியாக பல விடயங்களுக்காக நாங்கள் இருவராக, குடும்பங்களாக, ஒரு சிறு கூட்டமாக, சபையாக ஒன்று கூடலாம். எப்படிப்பட்ட கூட்டமாக இருந்தாலும், எங்கள் சிந்தனை, சொல், செயல் வழியாக தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டும். இன்னுமொருவரின் குறையையோ, அல்லது சபையில் நடைபெற்ற ஏதாவது தவறுதலையோ சம்பாஷித்துக் கொண்டிருத்தல் பக்திவிருத்தியை உண்டுபண்ணாது. அவை பிரிவினையின் கசப்பான வேரை முளைத்தெழும்பச் செய்யும். அவனவன் வாயின் பலனால் அவனவன் வயிறு நிரம்பும் அவனவன் உதடுகளின் விளைவினால் அவனவன் திருப்தியாவான். மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும் அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள். எனவே ஆகாத சம்பாஷணைகளை எம்மைவிட்டு அகற்றி, உன்னதமான அழைப்பையுடைய நாம், எங்கள் உள்ளத்தால் தேவனை உயர்த்துவோம்.

**நீதிமொழிகள் 13:3**

**தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான் தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான்**

**ஜெபம்**: உன்னதமான தேவனே, அநாவசியமான வார்த்தைகளையும், ஆகாத சம்பாஷணைகளையும் என்னைவிட்டு தூரப்படுத்தும்படியாய் உணர்வுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சிறிய மாற்றங்கள்...

ஒரு குடும்பத்திலே ஏற்பட்ட எதிர்பாராத சூழ்நிலைகள் காரணமாக, குடும்பத் தேவைகளை சந்திப்பதற்காக, கணவன் மனைவியாக இருவரும் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. பல பாடுகள், கஷ்டங்கள் மத்தியிலே, தங்கள் சுகபோகங்களையும் உல்லாச பயணங்களையும் தியாகம் செய்து, தங்கள் பிள்ளைகள் நல்ல நிலைக்கு வரவேண்டும் என்று அயராது உழைத்தார்கள். பிள்ளைகள் சிறார்களாக இருந்ததால், இவர்களுடைய பாடுகளின் கருப்பொருளை அறிய முடியாதிருந்தது. ஆனால் பல ஆண்டுகள் கடந்து சென்று, பிள்ளைகள் வளர்ந்து முதிர்ச்சி நிலையை அடைந்த போது, தங்கள் பெற்றோர் செய்த தியாகங்கள் எவ்வளவு பெரியது என்று அறிந்து கொண்டார்கள். அதை நினைக்கையில் அவர்கள் உள்ளத்திலே கண்ணீர் பெருகிற்று. அவர்கள் ஏன் இப்படியாக கஷ்டப்பட்டார்கள் என்பதை அதிகமாக சிந்தித்த அவர்களுடைய மகள், தன் வாழ்க்கையை சிறப்பாக வாழ்வதனால் மாத்திரமே நான் என் பெற்றோரின் பிரயாசத்தின் கருப்பொருளை நிறைவேற்ற முடியும் என்று, தன் வாழ்க்கையை ஒழுங்குபடுத்த ஆரம்பித்தாள். மேலும் பெற்றோரை இன்னும் அதிகமாக நேசித்தாள். அவர்களுக்கு நன்றியுள்ளவளாக இருந்தாள். பெற்றோரின் சிறப்பான குண இயல்புகள் தன் வாழ்விலும் பெருக வேண்டும் என்று வாஞ்சித்தாள். இப்படியாக தன் வாழ்க்கையில் சிறிய மாற்றங்களை செய்ய ஆரம்பித்தாள். பிரியமானவர்களே, தேவனுடைய அநாதி அன்பை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஒருவரும் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு தன் ஏக சுதனாகிய இயேசுவை எங்களுக்காக கொடுத்தார். எங்கள் பாவங்களை சுமந்து தீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டியாக அவர் மாறினார். மனிதரின் அறிவுக்கெட்டாத தேவ அன்பை தியானிக்கும் போது எங்கள் உள்ளத்தில் நன்றி பெருக வேண்டும். அந்த நன்றியுணர்வு எங்கள் வாழ்க்கையில் மாற்றங்களை உண்டு பண்ண வேண்டும். நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும்,தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படும்படி, பிதாவாகிய தேவனை நோக்கி முழங்கால்படியிட்டு, ஜெபியுங்கள், வாழ்வில் சிறிதான மாற்றங்களை ஆரம்பியுங்கள். தேவ ஆவியானவர் உங்களில் பெரிதான மாற்றங்களை உண்டாக்குவார்.

**எபேசியர் 3:19**

தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப் படவும்,

**ஜெபம்**: பரலோக தேவனே, நான் சகல பரிபூரணத்திலும் நிறைவடையும்படியாய், என் வாழ்வில் நன்மைகேதுவான தீர்மானங்களை எடுத்து, அவற்றில் நிலைவரப்பட கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அழைப்பை அறிந்து கொள்ளுங்கள்

ஐயா மிஷனரி அவர்களே, உங்கள் சொந்த, பந்தம், செல்வம் யாவையும் விட்டு, பலதியாகங்களை செய்து, எங்கள் மத்தியிலே பல ஆண்டுகளாக சேவை புரிந்து வருகின்றீர்களே, எல்லா ஊழியர்களும் உங்களைப் போல இருந்துவிட்டால் எவ்வளவு நலமாயிருக்கும் என ஒரு பெண்மணி மிஷனரியிடம் கேட்டாள். அவரோ, தயவாக, மகளே, நான் இன்று அடைந்திருக்கும் இந்த நிலைக்கு வருவதற்கு, தேவனுடைய கிருபையானது, சபையிலும், சில அமைப்புக்களிலுள்ள பல மனிதர்கள் வழியாகவும் வெளிப்பட்டது. அந்த மனிதர்கள் தங்கள் தனித்துவமான அழைப்பை முறைப்படி செய்ததால் நான் இன்று உன் முன்னிலையில் நிற்கின்றேன். இந்த கிராமத்திலும் என் அழைப்பை நிறைவேற்ற உன் குடும்பத்தைப் போல, இன்னும் பலர் எனக்கு ஒத்தாசையாக இருந்து வருகின்றார்கள். பலர் பொருளாதார உதவியை செய்கின்றார்கள், பலர் எனக்காக ஜெபித்து வருகின்றார்கள். அவையெல்லாம் அவர்களுடைய தனித்துவமான அழைப்பே. எல்லாம் தேவனுடைய ஈவு. நான் ஒரு அப்பிரயோஜனமான மனுஷன் என அவர் கூறினார். முன்னோடியாய் வாழ்ந்த நல்ல சாட்சிகளை பார்த்து, அவர்களைப் போல நானும் மாற வேண்டும் என்ற விருப்பம் எங்களில் பலருக்கு உண்டு. இயேசுவுக்கு முன்பாக வந்த யோவான் ஸ்நானன், கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்த வந்தார். தன் பணியை நிறைவேற்றினார். இயேசுவுக்கு பின், அவருடைய அப்போஸ்தலர்களும் தம் பணியை நிறைவேற்றினார்கள். இன்று உலகிலே, அப்போஸ்தலர், போதகர்கள், மேய்ப்பர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மூப்பர்கள், உதவி ஊழியர்கள் என பலர் தங்கள் பொறுப்பை நிறைவேற்றி வருகின்றார்கள். இவர்கள் தங்கள் பொறுப்பை நிறைவேற்ற இன்னும் பலர் அவர்களுக்கு ஆதரவாக இருக்கின்றார்கள். சரீரத்தின் அவயவங்களின் தொழிற்பாடு வேறுபட்ட போதிலும், அவை யாவும் ஒரே சரீரத்தின் அவயவங்களாக இருப்பது போல, நாங்கள் யாவரும், தேவனுடைய அநாதி திருச்சித்தத்தின் ஒரு பகுதியாக இருக்கின்றோம். எனவே, நாங்கள் எங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பில் உறுதியாயிருப்போம்.

**ரோமர் 12:4**

ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல,

**ஜெபம்**: பரலோக தேவனே, நான் விரும்பும் காரியங்களைச் செய்யாமல், உம்முடைய அழைப்பை அறிந்து அதன்படி உம்முடைய திருச் சித்தத்தை என் வாழ்வில் நிறைவேற்ற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கர்த்தரால் ஆகும்

அகாஸ்வேருவின் ராஜா அரசாண்ட நாட்களிலே, பாபிலோன் ராஜா வாகிய நேபுகாத்நேச்சாரினால் சிறைப்பிடிக்கப்பட்ட மொர்தெகாய் என் னும் யூதன் வாழ்ந்து வந்தான். இவன் ராஜாவுக்கோ, ராஜ்யத்திற்கோ எந்த தீங்கும் செய்யாதவன். மாறாக, அகாஸ்வேரு ராஜாவை கொன் றுபோட, போடப்பட்ட சதித்திட்டத்தை, ராஜாவுக்கு தெரியப்படுத்தி, ராஜாவை உயிர் ஆபத்திலிருந்து காத்துக் கொண்டவன். அந்த நன் மை நினைக்கபடாமல் போயிற்று. எனி னும், ராஜாவுக்கு பிரியமான ஆமான் என்னும் மனிதன், மொர்தெகாய்க்கு விரோதியாக இருந்தான். மொர்தெகா யுடன் சேர்த்து, சகல யூதர்களையும் கொன்று போடும்படி சதி செய்து, ராஜ கட்டளையை பெற்றுக் கொண் டான். இதன்படி யூதர்களின் அழிவின் திகதி நிர்ணயிக்கப்பட்டாயிற்று. எல் லாமே மொர்தெகாய்க்கும் யூதர்களுக் கும் எதிராக இருந்தது. விடுதலைய டையும் சாத்தியம் இல்லை. இப்படி ப்பட்ட சூழ்நிலை எங்கள் வாழ்விலும் ஏற்படலாம். நாங்கள் செய்த நன்மை கள் நினைக்கப்படாமல் போகலாம். ஆனால் சர்வத்தையும் ஆளும் சர்வ வல்ல தேவன் ஒரு போதும் மறந்து போகமாட்டார். இவ்வண்ணமாகவே அதிசயிக்க தக்கவிதமாக யூத ஜனங்க ளுக்கு விடுதலையும் மொர்தகாய்க்கு பதவி உயர்வும் வந்தது. ராஜாவுக்கு பிரியமாக இருந்த அதிபதியாகிய ஆமான், ராஜாவின் விரோதியா க்கப்பட்டான். பதவியை இழந்து போனான். தான் போட்ட சதிக்குள் அவனே அழிந்து போனான். பிரியமானவர்களே, விடுதலை கர்த்தரிட த்திலிருந்து வரும். ஜெயம் கொடுக்கும் தேவன் எங்களோடிருக் கின்றார். அவருடைய ஆளுகைக்கு முடிவில்லை. அவருடைய நேரத்திற்காக காத்திருந்து ஜெபியுங்கள். மொர்தகாய்க்கு வந்த விடுதலையையும் உயர்வையும் தேவன் உங்களுக்கும் தந்தருள்வார்.

**எஸ்தர் 10:3**

யூதனாகிய மொர்தெகாய் ராஜாவாகிய அகாஸ்வே ருவுக்கு இரண்டாவதா னவனும், யூதருக்குள் பெரியவனும், தன் திர ளான சகோதரருக்குப் பிரியமானவனுமாயிருந் ததும் அன்றி தன் ஜனங் களுடைய நன்மையை நாடி, தன் குலத்தாருக் கெல்லாம் சமாதானமு ண்டாகப் பேசுகிறவனு மாயிருந்தான்.

**ஜெபம்**: சர்வ வல்லமையுள்ள தேவனே, மனிதர்கள் மறந்து போனாலும், நீர் ஒருபோதும் மறந்து போவதில்லை. உம்முடைய குறித்த நேரத்தி ற்காக காத்திருக்கும் பொறுமையை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | வைகாசி 13

📖 மாலை வாசகம் – லூக்கா 4:25–26

# தேவைகளை சந்திக்கும் தேவன்

எலியா என்னும் தீர்க்கதரிசியின் நாட்களிலே மூன்று வருஷமும் ஆறு மாதமும் வானம் அடைபட்டு, தேசமெங்கும் மிகுந்த பஞ்சம் உண்டாயிருந்தபோது, அந்நாட்களிலே, சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவை தன் குமாரனோடு வாழ்ந்து வந்தாள். அவளிடம் இருந்ததெல்லாம், பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே. இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்று அவள் கர்த்தரால் அனுப்பப்பட்ட தேவ மனிதனாகிய எலியாவுக்கு கூறினாள். தேவ மனிதனோ, அந்த ஏழை விதவையைப் பார்த்து “பயப்படாதே!” என்று பெலப்படுத்தினார். கர்த்தர் செய்யப் போகும் காரியத்தை அவளுக்கு கூறினார். பஞ்ச காலமாக இருந்தும், எப்படி மாவும் எண்ணெய்யும் தேவ மனிதர் தருவார் என்ற சந்தேகம் ஏதும் இல்லாமல். அவள் அவருடைய வார்த்தையை விசுவாசித்து, தேவ மனிதன் கூறிய பிரகாரமாக செய்தாள். தேவனாகிய கர்த்தர் அந்த ஏழை விதவையின் வீட்டை ஆசீர்வதித்தார். கர்த்தர் சொன்ன வார்த்தையின்படியே, பஞ்ச நாட்கள் முடியும்வரை பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை. கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை. தேவனாகிய கர்த்தர் அந்த ஏழை விதவையை நினைவு கூர்ந்தார். தேவ வார்த்தையை விசுவாசிப்பதற்கு, குறித்த சூழ்நிலையில் எந்த ஆதாரமும் இல்லாத வேளையிலே, அந்த பெண்மணி, தேவ வார்த்தையை விசுவாசித்தாள். தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டாள். தேசம் முழுவதும் ஆதரவற்ற நிலையிலிருந்தாலும், கர்த்தருடைய வார்த்தையை விசுவாசியுங்கள். கர்த்தருடைய கை குறுகிப் போகவில்லை. அவர் கேட்கக்கூடாதபடிக்கு அவர் செவிகள் மந்தமாகவில்லை. தேவன் அதிசயமான வழிகளிலே உங்கள் தேவைகளை சந்திப்பார்.

**1 இராஜாக்கள் 17:14**

கர்த்தர் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடும் நாள்மட்டும் பானையின் மா செலவழிந்து போவதும் இல்லை கலசத்தின் எண்ணெய் குறைந்துபோவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

**ஜெபம்:** வாக்குரைத்த தேவனே, உம்மை நம்பினோரை நீர் வெட்கப்பட்டு போகவிடுவதில்லை. அந்த உண்மையை நான் என் வாழ்வில் கடைப்பிடிக்கும்படியாய் என்னை பெலப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

**செவ்வாய் | வைகாசி 14** 📖 மாலை வாசகம் – அப் 7:20–30

# முன்னைய நாட்கள்

இந்த உலகின் எஜமான்கள், மனிதர்களின் திறமைகளை கண்டு, அதை உறுதிப்படுத்திய, பின்பே அவர்களை வேலைக்கு அமர்த்துகின்றார்கள். ஆனால் தேவனாகிய கர்த்தர் தாமே, மனிதர்கள் பிறக்கு முன்னே முன்குறிக்கின்றவர். அவ்வண்ணமாக, மோசே என்னும் மனிதனை அடிமைத்தனத்திலிருந்த இஸ்ரவேலை வழிநடத்தும் இரட்சகனாக முன்குறித்தார். அநித்தியமான பாவ சந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்து கொள்ளும் நாள் வரைக்கும், அதாவது, மோசே தன்னுடைய நாற்பதாவது வயதுவரை பார்வோனுடைய அரண்மனையிலிருந்து, எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனாயிருந்தான். பிற்பாடு, எகிப்தைவிட்டு அந்நிய தேசத்திற்கு சென்று, அங்கே தனது எண்பதாவது வயதுவரை குடியிருந்தான். தன்னுடைய 80வது வயது வரைக்கும் அவன் தன்னுடைய சொந்த ஜனங்களோடு, சஞ்சரித்து வந்த ஆண்டுகள் குறுகியதாகயிருந்தது. எனினும், கர்த்தர் குறித்த நாள் வந்த போது, கர்த்தர் மோசேயை இரட்சகனாக உயர்த்தினார். கர்த்தர் அவனை இரட்சகனாக உயர்த்தி இருக்க, யார் மோசேக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்ததை குறித்த கேள்வி கேட்க முடியும்? யார் மோசேயின் முன்னைய நாட்களை குறித்து விமர்சிக்க முடியும்? கர்த்தரோடு எதிர்த்து நிற்க யாரால் கூடும்? ஒருவராலும் முடியாது. இதற்கொத்ததாகவே, கர்த்தர் எங்களை தம்முடைய பிள்ளைகளாகும் அதிகாரத்தைக் கொடுத்திருக்கின்றார். நாங்கள் கர்த்தரை அறிய முன்பிருந்த நாட்களை குறித்து மற்றவர்கள் விமர்சிக்கலாம், ஆனால் கர்த்தரோ இனி எங்கள் முன்னைய பாவங்களை நினைப்பதில்லை. அதுபோல மற்றய விசுவாசிகளின் முன்னைய பாவங்களையும் எங்களை வழிநடத்த நியமிக்கப்பட்டவர்களின் முன்னைய பாவங்களையும் அவர் நினைப்பதில்லை. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார். எனவே கர்த்தர் அகற்றியவைகளை நாங்கள் பற்றிக் கொள்ளாதிருப்போம். கர்த்தர் ஒருவரே நீதியுள்ள நியாயாதிபதி.

**சங்கீதம் 103:12**

மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார்.

**ஜெபம்:** இரக்கமுள்ள தேவனே, நீர் மனமிரங்கி உம்முடைய பிள்ளைகளின் முன்னைய நாட்களை மன்னித்திருக்கின்றீர். நாங்களும் அதை இனி நினையாதிருக்க பெலன் தந்து வழிநடத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீ குணமாகின பின்பு...

இயேசு கலிலேயாக் கடலோரமாய் நடந்து போகையில், மீன்பிடிக்கிற வர்களாயிருந்த இரண்டு சகோதரராகிய பேதுரு என்னப்பட்ட சீமோனும், அவன் சகோதரன் அந்திரேயாவும், கடலில் வலைபோட்டுக் கொண்டிருக்கிறபோது, அவர்களைக் கண்டு: என் பின்னே வாருங்கள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டு, அவருக்குப் பின் சென்றார்கள். இப்படியாக, இயேசுதாமே, சீமோன் பேதுருவை தம்முடைய திருப்பணிக்காக பிரித்தெடுத்தார். சீமோன் பேதுரு, இயேசுவோடு சில ஆண்டுகளாக கூட இருந்து, இயேசுவின் போதனைகளை கேட்டவர், அதிசயங்களைக் கண்டவர், அதிசயங்களை செய்தவர், இயேசுவோடு உணவுண்டவர். வாழ்விலுல் சாவிலும் இயேசுவோடு இருப்பேன் என்று உறுதியாய் இருந்தவர். கர்த்தரை அதிகமாக நேசித்தவர். ஆனால் கர்த்தர் காட்டிக்கொடுக்கப்பட்ட அந்த இராத்திரியிலே, தன்னுடைய எஜமானாகிய இயேசுவை, தனக்கு தெரியாது என்று கூறி, மூன்று முறை மறுதலித்தார். இது பெரிதான துரோகம். ஆனால், கர்த்தராகிய இயேசு, சீமோன் பேதுருவை, மறுபடியும் ஸ்திரப்படுத்தி, தன் மந்தைகளை (தன்னுடையவர்களை) மேய்க்கும்படிக்கான பொறுப்பை சீமோன் பேதுருவிடம் கொடுத்தார். சில வேளைகளிலே, ஊழிய பாதையிலே நாங்கள், மிகவும் உறுதியாக ஓடினாலும், சீமோன் பேதுருவைப் போல தடக்கி விழுந்து விடும் நேரங்கள் ஏற்படலாம். அதனால், நாங்கள் ஓடி வந்த ஓட்டம் முடிந்து விட்டது என்பது பொருள் அல்ல. கர்த்தர் மறுபடியும், தூக்கி நிலைநிறுத்துகின்றவராயிருக்கின்றார். கர்த்தரை மறுதலித்த சீமோன் பேதுரு, மனம் கசந்து அழுதார். கர்த்தர் உயிர்தெழுந்தபின், "யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ என்னை நேசிக்கிறாயா" என்றார். பிசாசானவன் எங்களை கோதுமையை புடைக்கிறது போல புடைக்கும் வேளையில், கர்த்தர் எங்களுக்காக பரிந்து பேசுகின்றவராக இருக்கின்றார். நீங்கள் குணமடைந்த பின், மற்றவனின் விழுகையில் அவனை குற்றப்படுத்தாமல், பெலவீனரைத் தாங்குங்கள். கர்த்தரின் அன்பை காட்டுங்கள்.

**லூக்கா 22:32**

**நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்: நீ குணப்பட் ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்**

**ஜெபம்:** எங்களை நேசிக்கின்ற தேவனே, நீர் எம்மீது கொண்ட நேசத்தை நாங்கள் மற்றவர்களின் பெலவீன நேரங்களில், அவர்களுடன் பகிர்ந்து கொள்ளும்படியான இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிரிதெடுக்கப்பட்ட பாத்திரம்

பரிசுத்த வேதாகமத்திலுள்ள, புதிய ஏற்பாட்டு, 27 புத்தகங்களிலே, 13 புத்தகங்கள், தேவ ஊழியரான பவுல் வழியாக எங்களுக்கு அருள ப்பட்டிருக்கின்றது. யூதர் அல்லாதவர்களுக்கு நற்செய்தியை அறிவி ப்பதில் இவர் முன்னோடியாக விளங்கினார். கிறிஸ்துவின் நற்செய்தி அறிவித்ததன் நிமித்தம் பல பாடுகளை சகித்தார். தன் வாழ்வை திருப்பணிக்கு முற்றாக ஒப்புக் கொடு த்த இவர், மரணம் வரை கர்த்தருக்கு உண்மையாக இருந்தார். புருஷர்களு க்கும், ஸ்திரிகளுக்கும், பிள்ளைகளு க்கும், வயதானவர்களும், விதவைக ளுக்கும், ஊழியர்களுக்கும், வாலிபர் களுக்கும், மற்றும் யாவருக்கும் ஆவிக்குரிய அறிவுரைகளை எழுதி வைத்துள்ளார். இயேசுவே வாக்களிகப்பட்ட மீட்பர் என்று அறியும் முன்னதாக, இவர் யூத மார்க் கத்தை முழுமையாக பின்பற்றி வந்தார். அன்றைய உலகின் சமுதாய அந்தஸ்துள்ளவரும், கல்விமானுமாக இருந்தார். கிறிஸ்தவர்களை சிறை ப்பிடிப்பதிலும், துன்புறுத் துவதிலும் முன்னோடியாக இருந்து வந்தார். இயேசு கிறிஸ்துவே தெய்வம் என்று அறிந்த நாள் முதல் தன் வாழ்க்கையை முற்றும் முழுவதுமாக இயேசுவுக்கு ஒப்புக் கொடு த்தார். இவர் கிறிஸ்துவை அறிய முன்பு, கிறிஸ்தவத்திற்கு எதிராக இருந்தார் என்று கூறி, இவர் வழியாக தேவன் கொடுத்த அறிவுரை களை நாங்கள் தட்டிக் கழிக்கலாமா? தேவன் தன் பணிக்காக ஒரு பாத்திரத்தை பிரித்தெடுத்தால், அது தேவனுடைய நியமனம். அதை யாரும் அசட்டை செய்ய முடியாது. “அவன் புறஜாதிகளுக்கும் ராஜா க்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான். அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபடவேண் டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்” என்று கர்த்தர் பவு லைக் குறித்து சாட்சி கூறினார். கிறிஸ்துவை அறிய முன் இவரிடத்தி லிருந்த நீதி நியாயங்களையும், சமுதாய அந்தஸ்து, மற்றும் கல்வி அறிவையும் குறித்து பெருமையடையாமல், அவைகளை நஷ்டம் என் றும் குப்பை என்றும் கருதினார். வாழ்வானாலும் சாவானாலும் கிறிஸ் துவுக்காக எதையும் செய்ய ஆயத்தமாக இருந்தார். எங்களுடைய வாழ்க்கையிலும், கிறிஸ்துவை அறிய முன் இருந்த உலக மேன் மைகளை நாங்களும் குப்பையும் நஷ்டமுமாக விட்டு விடுவோம்.

**பிலிப்பியர் 1:21**

கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம். முடியும்.

**ஜெபம்:** மகிமையின் தேவனே, இந்த உலக அளவுகோலின்படி எனக்கு இருக்கும் மேன்மைகளை தள்ளிவிட்டு, நீரே எங்கள் ஒப்பற்ற செல்வம் என்பதை உணரும்படியான உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவனுடைய நியமனங்கள்

கடந்த தினங்களிலே, மோசே, பேதுரு மற்றும் பவுல் ஆகிய தேவ ஊழியர்களின் அழைப்பையும், அவர்கள் வாழ்க்கையையும் சுருக்கமாக பார்த்தோம். தேவனுடைய நியமனத்திற்கு முன்னதாக இவர்களின் வாழ்க்கை இப்படியாக இருந்ததே, இப்படியான தவறுகளை இவர்கள் செய்தார்களே என்று இவர்கள் வழியாக தேவன் கூறும் அறிவுரைகளை நாங்கள் அற்பமாக எண்ணுவோமாக இருந்தால், தேவனுடைய ஆளுகையை அசட்டை செய்கின்றவர்களாக இருப்போம். இன்றைய நாட்களிலே சில இடங்களிலே, "அந்த ஊழியரின் பழைய வாழ்க்கையை தெரியுமோ, அவர் இப்போது எனக்கு அறிவுரை கூறுகின்றார்" "அந்த சகோதரன் முன்பு அனுபவிக்க வேண்டியவைகளையெல்லாம் அனுபவித்துவிட்டார்" "என் அப்பா முன்பு செய்யாத காரியங்களையா நான் செய்கின்றேன், இப்போது இவர் எனக்கு போதிக்கின்றார்" என்று சில மனிதர்கள் கூறுவதை கேட்கின்றோம். இப்படி பேசுபவர்கள் தேவனுடைய நியமனத்தை அசட்டை செய்கின்றவர்கள். தங்கள் பாவத்தை ஏற்றுக் கொண்டு மனந்திருப்புவதற்கு பதிலாக, மற்றவர்களுடைய வாழ்க்கையில் இருந்து அவர்கள் கழித்துவிட்ட குப்பைகளை, தங்கள் உள்ளத்திலே எடுத்து வைக்கின்றார்கள். பிரியமானவர்களே, நீங்கள் யாதொரு குற்றத்தில் அகப்படும் போது, அதை உங்களுக்கு உணர்த்துகின்றவர்களுடன் சண்டை செய்யாதிருங்கள். உங்கள் குற்றங்களை நியாயப்படுத்த, உங்களை வழிநடத்துகின்றவர்களின் முன்னைய வாழ்க்கையைப் பற்றி பேசுவதை விட்டுவிடுங்கள். நீங்கள் வாழ்வடையும்படி இருக்கும் ஒரே வழி இயேசு. அவருடைய ஆளுகையை நீங்கள் அசட்டை செய்தால், வாழ்வடையும்படி எங்கே போவீர்கள்? என்னை ஏற்றுக் கொள்ளுகின்றவன் என்னை அனுப்பின பிதாவை ஏற்றுக் கொள்ளுகின்றான் என்று இயேசு கூறினார். அதே போல இயேசு அனுப்பினவர்களை ஏற்றுக் கொள்கின்றவன், இயேசுவை ஏற்றுக் கொள்கின்றான். எனவே, நீங்கள் நன்மையை கண்டடையும்படி உங்களை கர்த்தரித்தில் தாழ்த்துங்கள், அவர் எங்களை சுத்திகரித்து வழிநடத்துவார்.

**1 யோவான் 1:9**

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, என் குறைகளை நியாயப்படுத்த, மற்றவர்களின் குறைகளை பேசாதபடிக்கு, என்னை தாழ்த்தி உம்மிடம் ஒப்புக் கொடுக்கும்படி என்னை உணர்வுள்ளவனா(ளா)க்கும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பதறாத வாழ்வு

உலக பிரசித்தி பெற்ற கிரிக்கெற் விளையாட்டின் பயிற்சியாளர் ஒரு குறிப்பிட்ட அணியை உலக கிண்ணப் போட்டிக்கு ஆயத்தப்படுத்தி வந்தார். சிறப்பான விளையாட்டு வீரர்கள் அந்த அணியில் இருந்த போதும், எதிரிடையான சூழ்நிலைகள் ஏற்படும் போது, தங்கள் நிதானத்தை இழந்து, பதற்றமடைந்து விடுவதனால், தவறான முடிவுகளை எடுத்து விடுகின்றார்கள் என தன் கரிசனையைத் தெரிவித்தார். பரலோகத்தை நோக்கி சென்று கொண்டிருக்கும் எங்களுக்கு எதிராக செயற்பட்டு வரும் அந்தகார வல்லமைகள் எங்களை நெருக்கும் போது, சில வேளைகளிலே நாங்களும் பதற்றமடைந்து அல்லது சோர்வடைந்து தவறான முடிவுகளை எடுத்து விடுகின்றோம். அதையே எதிராளியாகிய பிசாசானவன் விரும்புகின்றான். எங்கள் பொறுமையை மாம்சத்தின் கிரியைகளால் காத்துக் கொள்ள முடியாது. எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன், நாங்கள் கோபமடையும்படியான வார்த்தைகளை பேசும் போது, அந்த கோபத்தை உள்ளடக்கி, எங்கள் இருதயத்தில் சேர்த்து வைப்பது நீடிய பொறுமை அல்ல. இருதயத்தில் சேர்த்து வைப்பது ஒரு நாள் மொத்தமாக வெளிப்படும். இப்படியான கோபத்தை அடக்கும் வழிமுறைகள் மாம்சத்திற்குரியது. எதிராளியானவன் எய்யும் அக்கினியாஸ்திரங்கள் போன்ற வார்த்தைகளை மேற்கொள்ளும்படியாய், விசுவாசம் என்னும் கேடகத்தை உயர்த்திப் பிடிக்க வேண்டும். கிரியை இல்லாத விசுவாசம் செத்தது. "உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்" என்று இயேசு கூறினார். எனவே, மற்றவர்கள் எங்களை கோபப்படுத்தும் போது, எங்கள் விசுவாசத்தை, கிரியையில் காண்பிக்கும்படியாய், கர்த்தருடைய வார்த்தையை விசுவாசித்து, எங்களை சபிக்கின்றவர்களை ஆசீர்வதிக்க வேண்டும். எங்களை நிந்திக்கின்றவர்களுக்காக ஜெபம் செய்ய வேண்டும். இப்படி கருத்துடன் நீங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும் போது, பிசாசானவனின் அக்கினியாஸ்திரங்களை நீங்கள் அவித்துப் போடுவீர்கள். இயேசுவில் நிலை கொண்ட விசுவாசி ஒரு நாளும் பதறமாட்டான்.

**எபேசியர் 6:16**

**எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள்.**

**ஜெபம்**: வழிநடத்தும் தேவனே, சோதனை நேரங்களிலே, நான் பதற்றமடைந்து, பிழையான தீர்மானங்களை எடுக்காதபடிக்கு, உம்மிலே எப்போதும் நிலைத்தவனாக இருக்க என்னை பெலப்படுத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# விசுவாசம் என்னும் கேடகம்

தேவன் விலக்கின மரத்தின் கனி எது என்பதை ஆதாம் ஏவாள் அறிந்திருந்தார்கள். அது தேவ கட்டளை. ஆனால் அவர்கள் அந்த கனியை ஒரு நாளும் புசிக்கவில்லை. புசிக்கும் நாளிலே நீங்கள் சாவீர்கள் என்று தேவன் கூறியிருந்தார். அந்த தேவ வாக்கை விசுவாசிப்பதே அவர்களுக்கு ஜீவனாக இருந்தது. இப்போது, இவர்கள் மனதிலே சந்தேகத்தின் வித்து விதைக்கப்பட வேண்டும் என்பதே பிசாசானவனின் நோக்கம். பிசாசானவன் ஏவாளை நோக்கி: அந்தக் கனியை புசிக்கும் நாளிலே, நீங்கள் சாகவே சாவதில்லை. நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து, தேவர்களைப்போல் இருப்பீர்கள் என்றது. இந்த வஞ்சகமான வார்த்தைகள், தேவனுடைய வார்த்தையைப் பார்க்கிலும் வசீகரமாக இருந்ததால் ஏவாள் அந்த கனியை புசித்தாள். ஆதிமுதல், பிசாசானவனின் தந்திரம் இதுவே. உடனடியாக கிடைக்கும் மாம்சத்தின் இச்சையின் திருப்தியை, வஞ்சகமான வார்த்தைகளைக் கொண்டு வசீகரமாக பேசுகின்றான். இந்த உபாயதந்திரங்களை நாங்கள் தேவன் பேரில் வைத்திருக்கும் விசுவாசத்தினால் மாத்திரமே ஜெயங் கொள்ள முடியும். இனி வரவிருக்கும் ஈடு இணையில்லாத மகிமையை உறுதிப்படுத்திக் கொண்ட பரிசுத்தவான்கள், தற்காலத்திலே தாங்கள் அனுபவிக்கும் அற்பமான பாடுகளை பொருட்படுத்தாமல், தங்களுக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் பந்தயப் பொருளை நோக்கி முன்னேறிச் சென்றார்கள். எப்படியாக, அந்த பரிசுத்தவான்கள் வரவிருக்கும் மகிமையை கண்டு கொண்டார்கள்? தங்கள் விசுவாசக் கண்களால் அதைக் கண்டு கொண்டார்கள். வாக்குரைத்தவர் உண்மையுள்ளவர், அதை எனக்குத் தருவார் என்று விசுவாச கேடகத்தை எப்போதும் உயர்த்திப் பிடித்தார்கள். பிரியமானவர்களே, பொல்லாங்கன், இதைப் பார், இதைக் கேள், இதைப் பேசு, இதைச் செய், இதை சிந்தனை செய் என்று எப்போதும் வசீகரமாகப் பேசுவான். அதற்கு இடங்கொடுக்கும் போது, தேவனுடைய வாக்குத்தத்தம் உங்கள் வாழ்க்கையில் இரண்டாவதாகப் போய் விடும். என்னதான் நடந்தாலும், தேவன் கூறிய வார்த்தைகளில் உறுதியாக நில்லுங்கள். விசுவாச கேடகத்தை உயர்த்திப் பிடியுங்கள்.

**1 யோவான் 5:4**

**தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும் நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.**

**ஜெபம்:** பரலோக தந்தையே, உம்முடைய வாக்கை எப்போதும் விசுவாசித்து, அதன்படி கிரியைகளை நடப்பிக்கவும், பிசாசானவன் போடும் வஞ்சகத்தை ஜெயங் கொள்ளவும் கிருபை செய்யும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | வைகாசி 20 | 📖 மாலை வாசகம் – எபிரெயர் 4:15

# உதவி செய்யும் ஆவியானர்

இரு அணிகளுக்கிடையிலான கிரிகெற் விளையாட்டுப் போட்டியின் போது, ஒரு அணியினர், மற்ற அணியிலுள்ள ஒரு சில விளையாட்டு வீரர்களை ஆட்டம் இழக்கச் செய்வது (Out)எப்படி என்பதை நன்கு அறிந்திருந்தார்கள். மற்றய அணியினரின் சில வீரர்கள் துடுப்பெடுத்து ஆடும்போது (Batting), எப்படியான பந்துவீச்சுகளை அவர்களுக்கு வீச வேண்டும் (Bowling) என்றும், அப்படியான பந்துவீச்சுகளை வீசும்போது, துடுப்பெடுத்தாடுபவர்கள் என்ன செய்வார்கள் என்பதையும் தெளிவாக அறிந்திருந்தார்கள். அதாவது, மற்ற அணியின் சில வீரர்களின் பெலவீனங்களை குறிப்பாக அறிந்திருந்தார்கள். சில வேளைகளிலே, பரம அழைப்பின் பந்தையப் பொருளை நோக்கி யாத்திரை செய்து கொண்டிருக்கும் எங்கள் பெலவீனங்களும் வெளியரங்கமாகயிருக்கின்றது. “இந்த வாலிபனை கோபப்படுத்துவது சுலபம்” “இன்னுமொருவர் பாவம் செய்தால் இந்த சகோதரி குழம்பி விடுவார்” “அவருடைய பிள்ளையைப் பற்றி ஏதாவது சிறிதாக கூறினால் போதும் அந்தத்தாயார் குழம்பிடுவார்” இப்படியாக மனிதர்களுடைய வாழ்க்கையில் பெலவீனங்கள் ஏற்படுவதுண்டு. சந்தர்ப்ப சூழ்நிலைகளில் சில வேளைகளில் அறியாமல தவறுகள் நடந்துவிடுவதுண்டு ஆனால், நான் எல்லாவற்றிலும் பூரணன் “ஆனால்” இந்தக் காரியத்தை மாத்திரம் எனக்கு சகிக்க முடியாது என சிலர் வெளியரங்கமாகவும் பெருமையாகவும் தங்கள் பெலவீனங்களைப் பற்றி பேசிக் கொள்வார்கள். இவர்கள் தங்கள் செய்கைகளை குறித்து எந்த மனந்திரும்புதலும் இல்லாமல் இருப்பதனால், எதிராளியானவனுக்கு முகவர்களாக மாறிவிடுகின்றார்கள். “இவரை தொட்டால் போதும், சபையின் ஒருமைப்பாட்டை குழப்பிவிடுவார்” என்ற நிலைக்கு நாங்கள் போய்விடக்கூடாது. எனவே எங்கள் பெலவீனங்களைக் குறித்து நாங்கள் மேன்மை பாராட்டாமல், அவைகளை மேற்கொள்ள உதவி செய்யும் ஆவியானவருக்கு இடங் கொடுப்போம். நாங்கள் மனந்திரும்புதலுக்குரிய முதல் அடியை எடுத்து வைக்கும் போது, ஆவியானவர் தாமே எங்களுக்கு பெலன் தந்து நடத்துவார். கிறிஸ்தவ வாழ்க்கை தினமும் மறுரூபமாகும் வாழ்க்கை. தேவன் தரும்பெலத்தால் பெலவீனங்களை மேற்கொள்ளுவோம்.

**ரோமர் 8:26**

**அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார்.**

**ஜெபம்:** கிருபை நிறைந்த தேவனே, என்னுடைய பெலவீனங்களைக் குறித்து அஜாக்கிரதையாக இருக்காமல், உம்மிலே பெலன் கொள்ளத்தக்கதாக என் மனக் கண்களை பிரகாசமடையச் செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனிதனுடைய யோசனை

இன்றைய உலகில் பல தீர்மானங்கள் ஆய்வுகளின் அடிப்படையில் (கணக்கெடுப்பு) எடுக்கப்படுகின்றது. உணவு பொருட்களை உற்பத்தி செய்வோர், வாடிக்கையாளர்களின் விருப்பம் என்ன என்பதை அறியும்படி ஆய்வுகளை நடத்துகின்றார்கள். அந்த ஆய்வுகளின் அடிப்படையில் தங்கள் உற்பத்தியை கட்டுப்படுத்துகின்றார்கள். இப்படியாக இந்த உலகிலே, ஆய்வுகளும் வாக்கெடுப்புக்களும் பல மட்டங்களிலே நடைபெற்று வருகின்றது. சில நாடுகளிலே, தேவன் பாவம் என்று விலக்கிய காரியங்களைக் கூட, ஆய்வுகளையும், வாக்கெடுப்புகளையும் மையமாக வைத்து உத்தியோகபூர்வமான சட்டங்களாக மாற்றுகின்றார்கள். இன்று சில சபைகளிலும் இப்படிப்பட்ட ஆய்வுகளையும் வாக்கெடுப்புக்களையும் செய்கின்றார்கள். ஆய்வுகளும் வாக்கெடுப்புக்களும் மக்களின் அபிப்பிராயத்தை தெரிவிக்கின்றது. அந்த அபிப்பிராயம் தேவனுடைய பார்வையிலே ஏற்புடையதாக இருக்கலாம் அல்லது தகாதவைகளாக இருக்கலாம். காலங்கள் கர்த்தருடைய கரத்திலிருக்கின்றது. மனிதன், காலையில் தோன்றி மாலையில் மறையும் புல்லின் பூவுக்கு ஒத்திருக்கின்றான். அவன் மறையும் நாளிலே அவன் யோசனை அழிந்து போகும். மனிதர்கள் தங்கள் அறிவுக்கு எட்டியபடி, தங்கள் நாட்டிற்கு ஒரு தலைவரை தெரிந்து கொள்கின்றார்கள், சில ஆண்டுகள் சென்றதும், தாங்கள் தெரிந்த தலைவர்கள் நாட்டுக்கு ஆகாதவர்கள் என்று கூறுகின்றார்கள். மற்றய மனிதர்களின் இருதயத்தில் என்ன இருக்கின்றது என்பதை ஒரு மனிதனும் அறியான். நாளை என்ன நடக்கும் என்பதையும் ஒரு மனிதனாலும் திட்டமாக கூற முடியாது. எனவே மனிதனுக்கு நன்மை எது? தீமை எது? என்பதை தேவன் ஒருவரே அறிந்தவராயிக்கின்றார். மனிதர்களுடைய விரும்பத்தை அல்ல, தேவனுடைய சித்தத்தை செய்யும்படியாக வேறு பிரிக்கப்பட்டிருக்கின்றோம். எனவே நாங்கள் ஆய்வுகளிலும், வாக்கெடுப்புக்களிலும் பங்குபெற்ற நேர்ந்தாலும், மனிதர்களுடைய விருப்பப்படியல்ல, எங்களுடைய எண்ணப்படி அல்ல, தேவனுடைய சித்தப்படி நாங்கள் செயலாற்ற வேண்டும். தேவ சித்தம் இல்லாத பெரும்பான்மையான முடிவில் எந்த பிரயோஜனமும் இல்லாமலே போய்விடும்.

**சங்கீதம் 146:4**

அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான் அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்.

**ஜெபம்:** சகலமும் படைத்த தேவனே, நீர் ஒருவரே என் வாழ்விற்கு நன்மை எது என அறிந்திருக்கின்றீர். என் சுயவிருப்பப்படி தீர்மானங்களை எடுக்காமல், உம் வார்த்தையின்படி வாழ என்னை பெலப்படுத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | வைகாசி 22

📖 மாலை வாசகம் - 2 தீமோ 3:16-17

# தேவனோடு இடைப்படுங்கள்

ஞாயிறு தேவ செய்திகள் வழியாகவும், வேத பாடங்கள் வழியாகவும் அநேக அறிவுரைகளை கேட்கின்றோம். மேலும் இந்த அனுதின தியானங்களிலும், வாழ்க்கையின் பலவிதமான காரியங்களைக் குறித்து தியானிக்கின்றோம். இவை யாவற்றையும் பார்க்கும் போது, ஒரு கிறிஸ்தவனாக வாழ்வதற்கு இவ்வளவு காரியங்களை செய்ய வேண்டுமா? இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டும் என்ற நினைவுகள் மனதில் தோன்றலாம். கடக்க வேண்டிய பள்ளத்தாக்குகளையும், ஏற வேண்டிய மலைகளையும் குறித்து சோர்வடைந்து போகாமல். தேவன் உங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொடுத்திருக்கும் இலகுவான காரியங்களை செய்யுங்கள். அவையாவன: கருத்துடன் வேதத்தை வாசியுங்கள், தினமும் ஊக்கமாக ஜெபியுங்கள். எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணுங்கள் (எபே 6:18). சபை கூடிவருதலை விட்டுவிடாதிருங்கள். சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நீங்கள் விட்டுவிடாதிருங்கள் (எபிரெயர் 10:25). சத்திய ஆவியானவர் வரும் போது சகல சத்தியத்திலும் உங்களை வழிநடத்துவார் (யோவான் 16:13) என்ற பிரகாரம், இவைகள் வழியாக தேவன் உங்கள் உள்ள த்தில் பேசி நீங்கள் செய்யவேண்டிய காரியங்களை உங்களுக்கு போதிப்பார். அப்பொழுது உங்கள் முன் நின்ற மலைகள், பள்ளத்தாக் குகள், ஆறுகள் மற்றும் அக்கினி போன்ற சவால்களை நீங்கள் இலகுவாக கடந்து வந்ததை குறித்து ஆச்சரியப்படுவீர்கள். இயேசுவானவர், எப்போதும் தனித்திருந்து பிதாவாகிய தேவனோடு ஜெபத்தில் இடைப்படுகின்றவராக இருந்தார். அவர்தாமே, இந்த பூமியிலே செய்ய வேண்டிய காரியங்களையும், சொல்ல வேண்டிய காரியங்களையும் குறித்து வழிநடத்துதலை பெற்றுக் கொண்டார். தேவன் உங்களோடு இடைப்படும் இவைகளை (வேத வாசிப்பு, ஜெபம், சபை கூடிவருதலை) துண்டித்து விடாதிருங்கள். இவைகள் பாரமானவைகள் அல்லவே. இவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு. இவைகளுக்கு மாற்றீடாக வேறெந்த காரியங்களையும் நீங்கள் செய்ய முடியாது. எனவே ஞான நன்மைகளை பெற்றுக் கொள்ளும்படி இவைகளை வாஞ்சையோடு கைகொள்ளுங்கள்.

**சங்கீதம் 19:7**

**கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது**

**ஜெபம்:** அன்பின் தேவனே, உம்முடைய வழிநடத்துதலை நாம் பெற்றுக் கொள்ளும்படி நீர் ஏற்படுத்திய வழிமுறைகளை நான் வாஞ்சையுடன் கைக்கொள்ள என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எல்லாம் என் இயேசு

நீங்கள் ஆடுகளை மேய்க்கும் நல்ல ஒரு மேய்ப்பனாக இருக்கின்றீர்கள் என வைத்துக் கொள்வோம். உங்கள் மந்தையில் இருக்கும் ஒரு ஆடு எப்போதும் விளையாட்டு தனமுடையதாகவும், உங்கள் சத்தத்தைக் கேளாமல், மற்றய மந்தைகளை விட்டு துள்ளித் துள்ளி அங்குமிங்குமாக ஓடுகின்றதாயுமிருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? ஓநாய் வந்து அந்த ஆட்டை பிடிக்கு முன்பு, நீங்கள் அதை எப்படியாவது சீர்ப்படுத்துவீர்கள் அல்லவா! சில வேளைகளிலே ஆடுகளை மேய்ப்பவர்கள் சில ஆடுகள் துரிதமாக ஓடி, விலகிப்போகாதபடிக்கு, விசேஷமாக அதன் மேல் அதிக நோக்கமாயிருப்பார்கள். தங்கள் பிள்ளைகளை நேசிக்கின்ற பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளில் ஒருவன், எப்போதும் குறும்புத்தனமாக இருந்துவிடுவதற்கு அனுமதிப்பதில்லை. சில வேளைகளிலே (எல்லா வேளைகளிலும் அல்ல), அவர்களை கண்டித்து, தண்டித்து நடத்துவார்கள் அல்லவா! சத்திர சிகிச்சை செய்யும் வைத்தியர், சிகிச்சை செய்யும் இடத்தை திறக்கும்படிக்கு அந்த இடத்தை வெட்டுவாரல்லவா. அவருடைய நோக்கம், நோயாளியை குணப்படுத்த வேண்டும் என்பது அல்லவா! எங்களை வழிநடத்தும் இயேசு எங்கள் நல்ல மேய்ப்பராக இருக்கின்றார். ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார். அவர் அன்புள்ள தந்தையைப் போல தோளிலே சுமக்கின்றவர். சில வேளைகளிலே, நல்ல தந்தையைப் போல கண்டித்து, தண்டித்து நடத்துகின்றார். கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். இயேசு எங்கள் பரம வைத்தியராக இருக்கின்றார். அவருடைய வார்த்தை எங்களை தேற்றுகின்றது. அவர் தமது வசனத்தை அனுப்பி தம்முடையவர்களை குணமாக்குகின்றார். சில வேளைகளிலே, அவர் சத்திர சிகிச்சை செய்யும் வைத்தியர் போல எங்களை காயப் படுத்தி நோயை ஆற்றுகின்றவராயிருக்கின்றார்.

**யோபு 5:18**

அவர் காயப்படுத்திக் காயங்கட்டுகிறார் அவர் அடிக்கிறார், அவருடைய கை ஆற்றுகிறது.

**ஜெபம்**: வழிநடத்தும் தேவனே, உம்முடைய அன்பு பெரியது. நீர் நேசிக்கின்றவர்களுக்கு நீர் எல்லாமாக இருந்து, சீர்திருத்தி, ஸ்திரப்படுத்தி நடத்திச் சென்று முடிவிலே மகிமையில் சேர்ப்பதற்காக நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தனிப்பட்ட வளர்ச்சி

ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, ஒருவருக்கொருவர் புத்திசொல்லி, திடனற்றவர்களை தேற்றும்படியாகவும், பலவீனரைத் தாங்கும்படியாகவும் சபை ஐக்கியம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இதனால் வரும் பலன் அதிகம். எனினும் கிறிஸ்த வாழ்க்கையில் தனிப்பட்ட வளர்ச்சி இன்றியமையாதது. தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே. கர்த்தராகிய இயேசு ஏற்படுத்திய ஊழியர்கள், நாங்கள் இயேசுவிலே நிலைத்திருக்கும்படி, அவரோடு எங்களை சேர்த்துவிடும்படியாக எங்களை வழிநடத்துகின்றார்கள். அதாவது, இயேசுவே திராட்சைசெடி, அந்த செடியிலே, நாங்கள் ஒவ்வொருவரும் தனிப்பட இணைக்கப்பட்டிருக்கின் றோம். ஊழியர்களும் தனிப்பட இயேசுவிலே இணைந்திருப்பது போல, விசுவாசிகள் ஒவ்வொருவரும் தனிப்பட இணைந்திருக்கின்றார்கள். எங்களுக்கும் இயேசுவுக்கும் இடையில் எந்த மனிதர்களோ, வேறு எந்த சிருஷ்டியோ இருக்க முடியாது. இந்த உலகிலே பரிசுத்த வாழ்வு வாழ்ந்து, மறைந்து போனவர்களோ இந்த உலகிலே தற்போது வாழும் பரிசுத்தவான்களோ எங்களுக்கு மத்தியஸ்தம் வகிக்க முடியாது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே.நாங்கள் கூடி வாழ்ந்தாலும், நாங்கள் தனிப்பட்ட வாழ்க்கையிலோ, குடும்ப வாழ்க்கையிலோ, சபை சமுக வாழ்க்கையிலோ, நாங்கள் தனிப்பட்ட தீர்மானங்களை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படும் சந்தர்ப்பம் வரும். அந்த வேளைகளிலே, எங்களுக்கு உதவுவதற்கு யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் நாங்கள் இயேசுவோடு இணைந்திருந்தால், எந்த சூழ்நிலையிலும் அவர் அன்பைவிட்டு எங்களை ஏதும் பிரிக்காது. எனவே தேவனை அறிகின்ற அறிவில் நாங்கள் அனுதினமும் வளரவேண்டும். அவரிலே நிலைத்திருந்தால், என்ன நடந்தாலும் ஏது நடந்தாலும் அவர் எங்களை கைவிடமாட்டார்.

**யோவான் 15:5**

நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்

**ஜெபம்:** கிருபை நிறைந்த தேவனே, கிறிஸ்துவிலே நிலைத்திருந்து கனிகொடுக்கும் வாழ்க்கையில் அனுதினமும் வளர்ந்து பெருகும்படியாய் என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நிறைவானதை நோக்கி...

தன் பிள்ளைகளை நேசிக்கும் தந்தை ஒருவன், நாளாந்தம் கடுமையாக உழைத்து, நாட்கூலியில் தன் குடும்பத்தை கவனித்து வந்தான். ஆனால், அவனுடைய பிள்ளைகளில் ஒருவன், வீட்டிற்கு வந்ததும், இந்த வீட்டில் ஒழுங்காக நாற்காலி இல்லை, ஒழுங்கான சாப்பாடு இல்லை, ஒழுங்கான படுக்கை இல்லை என்று எப்போதும் குறை கூறிக்கொண்டே இருந்தான். அவன் கூறியவைகள் யாவும் உண்மை. ஆனால், அவன் தானும் அந்த குடும்பத்தின் அங்கத்தவன் என்பதை நினையாது, குறைவுகளை நிறைவு படுத்தும்படிக்கு தன் தந்தைக்கு உதவி செய்வதற்கு பதிலாக, எப்போதும், குடும்பத்தின் குறைகளையே பேசிக் கொண்டிருந்ததால், பெற்றோர் மனவேதனைப்பட்டார்கள். நீங்கள் தற்போது கிறிஸ்தவ ஆவிக்குரிய ஐக்கியமொன்றிலே இணைந்திருந்தால், முதலாவதாக, நான் இந்த ஆலயத்திலே இருந்து தேவனை ஆராதிக்கப் போகின்றேன் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். அங்கே அங்கத்தவராக இருக்கும்படி உறுதி செய்த பின்பு, அந்த குறை கூறும் மகனைப் போல இருக்காமல், குறைகளை நிறைவுபடுத்தும்படியாய், பிரயாசப்படுங்கள். அதற்குரிய பெலனும், ஆதாரமும், அதிகாரமும் உங்களுக்கு இல்லை என்றால், கருத்தோடு தேவனிடம் ஜெபியுங்கள். நீங்கள் ஊக்கமாக ஜெபித்தால் தேவன் மாறுதல்களை கொண்டுவருவார். ஜெபத்தினாலே ஜெயம் உண்டு. பல வேளைகளிலே மாறுதல்கள் மற்றவர்களில் அல்ல எங்கள் உள்ளத்திலேயே உண்டாகுகின்றது. உங்களுடைய சொந்த தீர்மானத்தின்படி நீங்கள் ஆராதிக்கும்படி தெரிந்து கொண்ட சபையிலே, கருத்தோடு தேவனை சேவித்து, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தி, இயேசு கிறிஸ்துவுக்குள், உங்களைக் குறித்ததான பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுங்கள். குறைவுகளையே நாங்கள் உற்றுப் பார்க்கும் போது, எங்கள் நிறை வான நோக்கத்தை மறந்து போய்விடுவோம். எங்களுடைய குடியிருப்பு இந்த பூமிக்குரியது அல்ல என்பதை ஒரு போதும் மறந்து போகாமல், எல்லாவற்றையும் தேவனுடைய பாதத்திலே வைத்து ஜெபம் செய்வோம்.

**பிலிப்பியர் 3:20**

நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**ஜெபம்**: என்றும் மாறாத தேவனே, இந்த உலகிலே இருக்கும் குறைகளையே உற்று நோக்கி, நிறைவான உம் அநாதி திட்டத்தை மறந்து போகாமலிருக்க உணர்வுள்ள இருதயத்தைத் தாரும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நாங்கள் பெற்ற பணி

**கொலோசெயர் 4:17**

**நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாயிருப்பாயாகவென்று சொல்லுங்கள்.**

ஒரு சமயம், உலக பிரசித்திபெற்ற சுவிஷேகர் ஒருவர், குறிப்பிட்ட நாட்டிற்கு வருகை தந்திருந்தார். அவரை சந்திக்கும்படியாக அநேக ஜனங்கள் திரண்டு சென்றார்கள். சிலர், தங்களுடைய ஆலயத்தில் நடக்கும் ஆராதனைகளையும், சிலர் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புக்களையும் விட்டுவிட்டு அந்த சுவிசேஷகருடைய ஆராதனையில் பங்குபற்றும்படி சென்றிருந்தார்கள். அந்த தேசத்திலே அநேக வருடங்களாக, தன் சொத்துக்களையும், வாழ்வையும் முழுமையாக அர்ப்பணித்து ஊழியம் செய்து வந்த ஒருவர் இருந்தார். "இன்றைய ஜெபக்கூட்டத்தை நிறுத்திவிட்டு நாங்கள் யாவரும் அங்கே ஆராதனைக்கு செல்வோமா" என்று சபையிலிருந்த சிலர் அந்த ஊழியரிடம் கேட்டார்கள். அந்த ஊழியர் "எங்கள் தேசத்திற்கு வருகை தந்திருக்கும் சுவிசேஷர், கர்த்தர் அவருக்கு கொடுத்த பணியை செய்கின்றார். அது போல நானும் எனக்கு கொடுத்த இந்த சிறிய பணியை நிறைவேற்ற வேண்டும். நான் எந்த விதத்திலும் அந்த சுவிஷேகருக்கு எதிரானவன் அல்ல. எங்கள் ஆலயத்தில் நடக்கும் ஆராதனைக்கு எதிர்பார்ப்போடு வரும் விசுவாசிகளை நான் வழிநடத்த வேண்டும், நீங்கள் அங்கே போவதற்கு எந்தத் தடையும் இல்லை" என்று தயவுடன் மறுமொழி கூறினார். ஆம் பிரியமானவர்களே, நாங்கள் பெற்ற பணி, சிறிதானதாகவோ அல்லது பெரிதானதாகவோ இருக்கலாம். அதை நிறைவேற்றுவதே எங்கள் நோக்கமாக இருக்க வேண்டும். எடுத்துக் காட்டாக, நீங்கள் போய் அந்த பிரபல்யமான சுவிசேஷகரிடம், உங்கள் கூட்டம் முடிந்த பின்பு, எங்கள் சபையில் இரண்டு கிழமைகள் நின்று செல்லுங்கள் என்று கூறினால், அவர் என்ன சொல்லுவார்? மன்னிக்கவும், எனக்கு இன்னுமொரு தேசத்திலே ஊழியம் உண்டு நான் அங்கு போக வேண்டும் என கூறுவார் அல்லவா. நாங்கள் மற்றய ஊழியங்களுக்காகவும், ஊழியர்களுக்காகவும் ஜெபம் செய்ய வேண்டும். எங்களால் முடிந்த ஆதரவை வழங்க வேண்டும். அவர்களுக்குரிய கனத்தைக் கொடுக்க வேண்டும். சமயம் வாய்த்தால் அவர்களை சந்திப்பது நல்லது. ஆனால் எந்த விதத்திலும் எங்களுக்கு கொடுத்த பொறுப்பை நாங்கள் அற்பமாக எடுக்கக்கூடாது.

**ஜெபம்:** அன்பின் பரலோக தந்தையே, என்னை நம்பி, நீர் எனக்குத் தந்த பொறுப்பை நான் அற்பமாக எடுத்துக் கொள்ளாமல், முழுமனதோடு அதை நிறைவேற்றி முடிக்க என்னை பெலப்படுத்தும். இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஞான போஜனம்

ஒரு வாலிபன், அயலில் வாழ்ந்து வந்த பிரதேசத்தவனாகிய தன்னுடைய சக வகுப்பு மாணவனுடன் மிகவும் நட்புள்ளவனாக இருந்தான். இந்த வாலிபன் அந்த பிரதேசத்து நண்பன் வீட்டில் சேர்ந்து படிக்கும் போது, நண்பனின் வீட்டார் இவனை தங்களுடைய நாட்டுக்குரிய போஜனங்களால் உபசரிப்பார்கள். இந்த விவகாரம், அடிக்கடி நடந்து வந்ததால், அந்த வாலிபனின் பெற்றோர், மகனே, நீ உன் நண்பனோடு சேர்ந்து படிப்பது நல்லது ஆனால் நீ வீட்டிலே சாப்பிடுவது உனக்கு நல்லது என்று கூறினார்கள். "அவர்கள் என்ன நஞ்சையா உண்கின்றார்கள்? அவர்களுடைய ஆகாரத்திலே என்ன குறை" என்று வாலிபன் கேட்டான். அவன் தாயார் அவனை நோக்கி: மகனே, அவர்களுடைய ஆகாரம் உருசியானது, அவர்களுடைய விருந்தோம்பல் மேன்மையானது. ஆனால், உன்னுடைய உடலிலே சில குறைபாடுகள் உண்டு, அதைப்பற்றி எனக்கும் உன் தந்தைக்கும் மாத்திரமே நன்றாக தெரியும். நீ எதிர்காலத்தில் ஆரோக்கியமாக வாழ்வதற்கு, தற்போது நீ குறிப்பிட்ட ஆகாரத்தை உண்பதே உனக்கு நலம் என்றார். பிரியமானவர்களே, இதற்கொத்ததாகவே, உலகிலுள்ள சபைகளும், சபையிலுள்ள விசுவாசிகளும், அதன் ஊழியர்களும் இருக்கின்றார்கள். நீங்கள் ஒரு சபையிலே அங்கத்தவராக இருப்பது தேவனுடைய சித்தமோ அல்லது சித்தம் இல்லையோ என்னும் சந்தேகம் உங்களிடம் இருக்குமென்றால், நல்மனதோடு தேவனிடத்தில் விண்ணப்பித்தால் அவர் அதை நிச்சயமாக வெளிப்படுத்துவார். அப்படியாக நீங்கள் ஆராதிக்கும் இடத்தை உறுதிசெய்த பின்பு, அங்கே உங்களுக்கு கொடுக்கும் ஆவிக்குரிய ஆகாரமாகிய தேவனுடைய செய்தி, உங்களுக்கு மிகவும் அவசியமானது. ஞாயிறு உங்கள் ஆலயத்தில் தேவசெய்தியை கேட்ட பின்பு, வீடு சென்று இன்னும் அநேக செய்திகளை கேட்காமல், உங்களுக்கு கொடுக்கப்பட்ட மேய்ப்பன் வழியாக தேவன் கூறிய செய்தியை அந்த கிழமை பூராவும் தியானியுங்கள், தேவனுடைய ஒழுங்கு முறைக்கு நாங்கள் கீழ்ப்படியும் போது, எங்கள் வாழ்வில் பெரிதான சமாதானத்தை கண்டடைவோம்.

**எரேமியா 3:15**

**உங்களுக்கு என் இருதயத்துக்கு ஏற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன், அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார்கள்.**

**ஜெபம்**: இருதயங்களை ஆராய்ந்தறிகின்ற தேவனே, என் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக நீர் ஏற்படுத்திய ஒழுங்கு முறைகளை நான் பின்பற்றி நடக்க என் மனக் கண்களை திறந்துவிடுவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கட்டுக்கள் அறுக்கப்படும்

அடிமைத்தன கட்டுக்கள் பெருகிக்கொண்டு போகும் நாட்கள் இவை. புகைபிடித்தல், மதுபோதை, பாலியல் சீர்கேடுகள், ஆபாசப் படங்கள், போதைவஸ்து போன்றவை அடிமைத் தனத்திற்கு பொதுவான உதாரணங்களாக இருக்கின்றது. இவைகளைவிட மனிதர்கள் தங்கள் சொந்த வாழ்வில் கண்டு கொள்ளாத அல்லது உணர்ந்து கொள்ள முடியாமல் இருக்கும் பல அடிமைத் தனங்களும் உண்டு. சிலர் பொருளாசை, பெருமை, கீழ்ப்படியாமை, கோபம், வன்மம், பகை போன்ற பல மாம்சத்தின் கிரியைகளுக்கு தங்களை அடிமைப்படுத்திக் கொள்கின்றார்கள். வேறு சிலர், திரைப்படங்கள், நாடகங்கள், கற்பனா இன்பம் (கற்பனை உலகில் வாழ்தல்), மற்றவர்களை குறித்து எப்போதும் நகைத்தல், கோள் சொல்லித்திரிதல், ஆகாத சம்பாஷணைகள், தூஷணமான வார்த்தைகளை பேசுதல் போன்ற பல கட்டுகளில் அறியாமலே வாழ்ந்து வருகின்றார்கள். அதாவது இவைகள் இவர்களின் நாளாந்த வாழ்வின் பெரும் பகுதியாக மாறிவிடுகின்றது. இவைகளை நிறைவேற்றுவதற்காக கடும் முயற்சிகளை எடுப்பார்கள். இவைகளினாலே புறம்பான மாம்சமான மனிதன் போஷிக்கப்படுவதால், படிப்படியாக தங்கள் ஆத்துமாவுக்கு நஷ்டம் விளைவித்துக் கொள்கின்றார்கள். எனவே, இப்படியான அடிமைத்தன வாழ்க்கையில் தங்கள் நாட்களை வீணடிக்கின்றவர்களுக்காக நாங்கள் அனுதினமும் போராடி ஜெபிக்க வேண்டும். ஜெபத்தினால் கட்டுகள் அறுக்கப்படும். கர்த்தருடைய வேளையை நாங்கள் அறியோம், ஆனால் அவருடைய சித்தம், நாங்கள் சோர்ந்து போகாமல் ஜெபிக்க வேண்டும் என்பதாகும். நாங்கள் மாம்ச சரீரம் உடையவர்களாயிருந்தாலும், இந்த மாம்சத்தின்படி போர்செய்கிறவர்களல்ல. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம். ஜெபமானது தேவன் எங்களுக்குத் தந்த பெரிதான ஆயுதம்.

**2 கொரிந்தியர் 10:4**

எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.

**ஜெபம்**: விடுதலை தரும் தேவனே, வாழ்க்கையை பாழாக்கும் அந்தகார கட்டுக்களில் அகப்பட்டிருப்போரை விடுதலை செய்யும்படிக்கு ஊக்கமாக ஜெபிக்கும் உள்ளத்தை எனக்கும் தந்தருள்வீராக.இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பயனுள்ள கருவிகள்

சிற்பங்களை செதுக்கும் சிற்பியின் கையில், பெரிய கல் ஒன்றையும், செதுக்கும் உபகரணத்தையும் கொடுத்தால், அதிலிருந்து ஒரு அழகான சிற்பம் வெளிப்படும். குயவன் களிமண்ணை எடுத்து பல பாத்திர ங்களை உருவாக்குகின்றான். நாங்கள் யாவரும் தேவனாகிய கர்த்த ருடைய கரத்தின் கிரியைகளாக இருக் கின்றோம். வேதத்திலே காணும் பல பாத்திரங்கள், தேவனுடைய கரத்தின் கருவிகளாக தங்களை ஒப்புக் கொடு த்திருந்தார்கள். கிதியோன் என்னும் மனி தனின் நாட்களிலே, இஸ்ரவேலர் மீதி யானியர் என்னும் அந்நிய நாட்டுப் படைகளால் மிகவும் ஒடுக்கப்படடு, வலுவிழந்த நிலையில் இருந்தார்கள். கிதியோன் இஸ்ரவேலிலே சிறியவனும் ஒரு சாதாரண மனிதனுமாக இருந்தான். இஸ்ரவேலை மீதியானியர் கையிலிருந்து விடுவிக்கும்படி, அவனை கர்த்தர் அழை த்த போது, இஸ்ரவேலை மீட்க நான் எம்மாத்திரம் என அவன் கூறி னான். கர்த்தர் கிதியோனை நோக்கி: உனக்கிருக்கும் இந்த பெல த்தோடு போ நான் உன்னோடு கூட இருப்பேன் என்றார். அவன் தன்னை ஒப்புக் கொடுத்த போது, கிதியோன் வழியாக கர்த்தர் மகத் தான வெற்றியை கொடுத்தார். அவன் கர்த்தருடைய கரத்தின் உப யோகமுள்ள கருவியானான். எங்களை உருவாக்கியவரே நாங்கள் உருவாக்கப்பட்ட நோக்கத்தை அறிந்தவராக இருக்கின்றார். அதை மறந்து நாங்கள் எங்கள் விருப்பங்களின்படி காரியங்களை நடத்தி வந்தால், நாங்கள் உருவாக்கப்பட்ட நோக்கத்தை, நாங்கள் நிறை வேற்ற மாட்டோம். “இதோ, போரடிக்கிறதற்கு நான் உன்னைப் புதி தும் கூர்மையுமான பற்களுள்ள யந்தரமாக்குகிறேன் நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய்” என்று தம் முடைய ஜனங்களுக்கு கூறிய தேவனுடைய சித்தத்திற்கு எம்மை நாம் ஒப்படைக்கும் போது நாங்களும் உபயோகமுள்ள அவருடைய கரத்திலே கருவிகளாக மாற்றப்படுகிறோம். எங்கள் வாழ்வின் நாளாந்த கிரியைகளில் தேவனுடைய சித்தம் நிறைவேற்றப் பட நாங்கள் இடங் கொடுக்க வேண்டும். நாம் அந்தகார வல்லமையாகிய இருளின் அதிகாரத்தை தகர்த்தெறியும் ஜெபமாகிய போராயுதத்தை பெற்றவர்களாக இருக்கின்றோம். நாங்கள் தீமையை தீமையால் வெல்லும் கருவிகள் அல்ல. தீமையை திவ்விய சுபாவங்களால் வெல்லும் புதிதும் கூர்மையுமான இயந்தரமாக இருக்கின்றோம்.

**ஏசாயா 64:8**

**நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை.**

**ஜெபம்:** சர்வ வல்லமையுள்ள தேவனே, உம்முடைய கரத்தின் கிரியை களாகிய நாங்கள், உம்முடைய கரத்திலுள்ள பயனுள்ள கருவிகளாக சிறந்து விளங்க எங்களை வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# குமாரனுக்கு ஒத்த சாயல்

பக்கத்து வீட்டிருலிருக்கும் அண்ணா, அழகாக கிற்றார் வாசிக்கின்றார். எனக்கும் கிற்றார் பழக ஆசையாக இருக்கின்றது. என்னுடைய பிறந்த தின பரிசாக எனக்கு ஒரு கிற்றார் வாங்கித் தாருங்கள் என, மக னானவன், தன் தந்தையிடம் கேட்டான். அவர்களும் அவனுடைய ஆசைப்படி வேண்டிக் கொடுத்தார்கள். சில கிழமைகள் ஆர்வமாக பயிற்சி செய்தான், பின்னர் கிற்றார் வீட்டில் அழகுப்பொருளாக ஒரு மூலை யிலே வைக்கப்பட்டிருந்தது. அப்படியி ருப்பதனால், இனிமையான இசையை ஒருவரும் கேட்டு ரசிக்கப்போவதி ல்லை. தேவன்தாமே, தம்முடைய பிள் ளைகளின் பக்திவிருத்திக்காக பல வர ங்களை கொடுத்திருக்கின்றார். அப்போஸ்தலர், சுவிசேஷகர், தீர்க்க தரிசி, மேய்ப்பர், போதகர் போன்ற ஊழியங்கள், குணமாக்கும் வர ங்கள் உட்பட பலவிதமான ஆவியின் வரங்களை அன்பளிப்பாக கொடுத்திருக்கின்றார். குணமாக்கும் வரத்தை உடையவன், ஊர் ஊராக சென்று மனிதர்களை குணமாக்கியபின், அந்த மனிதர்களின் வாழ்க்கையின் முறையில் தேவன் எதிர்பார்க்கும் மாற்றங்கள் உருவாகாவிட்டால் அந்த வரத்தினால் அவனுக்கு வரும் பலன் அற்பமே. தேவன் கொடுத்த வரங்களை ஒருபக்கமாக வைத்துவிட்டு, நாங்கள் எங்கள் பாட்டிற்கு வாழ்ந்தால், அந்த கிற்றாரை வேண்டி, ஒரு மூலையில் போட்ட வாலிபனுக்கு நாம் ஒத்திருப்போம். எங்கள் சபையிலே, வேத பாடங்களை அருமையாக சொல்லித்தரும் போதகர் ஒருவரை தேவன் தந்திருக்கின்றார் என வைத்துக் கொள்வோம். ஏன் அந்த வரத்தை தேவன் எங்கள் சபையினருக்கு கொடுத்தார்? நாங்கள் வெளியிலே சென்று, எங்கள் சபையிலேதான் அதி சிறந்த வேத வல்லுனர் இருக்கின்றார் என பெருமையுடன் மற்றவர்களுக்கு கூறு வதற்காகவா? இல்லை! நாங்கள் அந்த வார்த்தைகளைக் கேட்டு, எங்கள் சுபாவங்கள் கிறிஸ்து இயேசுவுக்கு ஒத்ததாக மாறும்படிக்கே தேவன் அப்படியான வரத்தை தந்திருக்கின்றார். வரங்கள் பல இருந்தும் நாங்கள் கிறிஸ்துவைப் போல மாறாவிட்டால், எங்களின் முடிவு, மற்றய உலக மனிதர்களின் முடிவிலும் பரிதாபமுள்ளதாக இருக்கும். எனவே தேவன் கொடுத்த வரங்களின் கருப்பொருளை உணர்ந்தவர்களாக, திருக்குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் சாயலை அடையும்படிக்கு எங்களை ஒப்புக் கொடுப்போம்.

**ரோமர் 8:29**

குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்

**ஜெபம்**: அன்புள்ள பரலோக தந்தையே, நீர் தந்த வரங்களினால், நாங்கள் பக்திவிருத்தியடைந்து உம்முடைய திருக் குமாரனின் சாயலில் வளர்ந்து பெருகும்படிக்கு எங்களை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆளுகை செய்வோம்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த ஏழ்மையான மனிதன் ஒருவன், சந்தை வெளிகளில் சென்று, இயேசுவின் அன்பையும், அவர் தரும் ஆன்மீக விடுதலையையும் குறித்து கூறிவந்தான். ஒருநாள், அந்த ஊரிலே கல்விமான்கள் என்று பெயர்பெற்ற சிலர், அந்த மனிதனை சூழந்து கொண்டு, பலவிதமாக தங்களுக்கு அடுத்த கேள்விகளை கேட்டு, தாங்கள் அறிந்த விஞ்ஞான விளக் கங்களை பற்றி பேசி, அந்த மனி தனை நகைத்தார்கள். அவனுக்கு எந் தக் உலக கல்வி அறிவும் இல்லை எனவே இந்த அறிவு அவனுக்கு எட் டாத உயரத்திலுள்ளது என பரியாசம் செய்தார்கள். அந்த எளிமையான மனிதனோ, அவர்களுடன் தர்க்கித்து பேசாமல், நற்செய்தியை அறிவித்து பின் வீடு திரும்பினான். இப்படிப்பட்ட சம்பவங்கள் இன்று அநேக மட்டங்களில் நடைபெற்று வருகின்றது. சிலர் இதை ஒளிப்பதிவு செய்து, ஊடகங்கள் வழியாக மற்றவர்களுக்கு அனுப்பி, தேவ ஊழியர்களை அவமதிக்கின்றார்கள். இவ்வண்ணமாகவே இயேசு இந்த உலகத்திலே இருந்த நாட்களிலே, பலர் அவரையும் பரிசயாசம் பண்ணினார்கள். பிரியமானவர்களே, எங்களுடைய திருப்பணி, இந்த உலகிலே நாங்கள் விவாதங்களில் வெற்றி பெறுவதுக்குரியதல்ல. நீதிபரராகிய இயேசுவின் முதலாம் வருகையை முன்னறிந்து முன்னறிவித்தவர்களாகிய தீர்க்கதரிசிகளை இந்த உலகத்தின் ஞானி கள் கொலைசெய்தார்கள். நீதிபரராகிய இயேசுவையும் கொலை செய்தார்கள். இயேசு பரலோகத்திற்கு எழுந்திருளினபின்பும், வந்த பரிசுத்தவான்களை துன்பப்படுத்தி வருகின்றார்கள். எனவே சோர்ந்து போகாதிருங்கள். சண்டை செய்யாதிருங்கள். நற்செய்தியை அறிவித்த அந்த ஏழ்மையான ஊழியரும், அவரை நகைத்த அந்த ஊரின் ஞானி களும், ஒரு நாள் நீதிபரராகிய இயேசுவின் முன்னிலையில் நிற்க வேண்டும். அந்த நாளிலே, அந்த ஏழ்மையான ஊழியர் அளவில்லா மகிழ்சிக்குள்ளாகுவார். தாம் அனுப்பின ஊழியர்களை துன்பு றுத் திய மனிதர்களுக்குரிய தீர்ப்பை நீதிபரராகிய இயேசு அந்நாளிலே கொடுப்பார். எனவே நாங்கள் வெட்கமடையாமல், இயேசுவின் ஸ்தா னதிபதிகளாக, சத்திய வசனத்தை நிதானமாய் சாந்தத்தோடு அறிவி ப்போம். கர்த்தருடைய நாளில் ஈடு இணையில்லா மகிமை நமக் குண்டு.

**2 தீமோத்தேயு 2:12**

அவரோடேகூடப் பாடுக ளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுக யும் செய்வோம்

**ஜெபம்:** நீடிய பொறுமையுள்ள பிதாவே, நான் வெட்கப்படாமல், உம்முடைய திருவசனத்தை மற்றவர்களுக்கு அமைதலோடு அறிவிக் கும்படிக்கு என்னை நீர் வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அன்பான வாசகர்களுக்கு!

**“உள்ளான மனிதன்”** மாதாந்த சஞ்சிகையை வெளியீட்டை ஆரம்பித்து, **ஐந்து (5) வருடங்களை**, பூர்த்தி செய்திருக்கின்றோம். இது தேவனுடைய ஈவு!

இந்த சஞ்சிகையிலே தரப்பட்டுள்ள, புதிய நாளுக்குள் அனுதின தியானக் குறிப்புக்கள், **ஒலிப்பதிவு செய்யப்பட்டு**, எங்கள் இணைத் தளத்தில் பதிவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை உங்களுக்கு அறியத் தருகின்றோம். தியானக் குறிப்புக்களின் **ஒலிப்பதிவை கேட்பதற்கு,** எங்கள் இணையத்தளத்தில், உள்ளான மனிதன், தியானப் பக்கத்தை ( INNER MAN, DAILY DEVOTION) தெரிவு செய்யுங்கள்.

உள்ளான மனிதன் சஞ்சிகை **இலங்கையிலும்** புத்தக வடிவிலே அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. மேலும், **அமெரிக்கா, ஐரோப்பியா, அவுஸ்ரேலியா** கண்டங்களிலுள்ள நாடுகளிலும் விநியோகிக்கப்பட்டு வருகின்றது. உங்கள் உறவினர் நண்பர்கள் அதை பெற்றுக் கொள்ள விரும்பினால், அவர்களின் முகவரியை மின்-அஞ்சல் ஊடாகவோ, அல்லது தொலைபேசி ஊடாகவோ எங்களுக்குத் தெரியப்படுத்தலாம். அல்லது இந்தப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்திலுள்ள விண்ணப்பப் படிவத்தில் உங்கள் விபரங்களை பதிவுசெய்து, எங்கள் முகவரிக்கு அனுப்பிவையுங் கள்.

சகலமும் படைத்த சர்வ வல்லமையுள்ள தேவனின் ஜீவ வார்த்தைகளை அனுதினமும் வாசித்து தியானியுங்கள். தேவனை அறிகின்ற அறிவிலே வளருங்கள்! உங்களைக் குறித்ததான பிதாவாகிய தேவனின் சித்தத்தை இந்த பூமியிலே நிறைவேற்றுங்கள்! நித்திய இன்ப வாழ்வை பரலோகில் பெற்றுக் கொள்ளுங்கள்.

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்-திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்**. (யோவான் 3:16)

**கிருபையின் கூடாரம் அப்போஸ்தல சபை**

**ரொரன்ரோ, கனடா ☎ 416.613.2909**

உள்ளான மனிதன் மாதாந்த பிரதி

# விண்ணப்பப் படிவம்

முழுப் பெயர் FULL NAME:

| |
|---|
| |
| |

முகவரி ADDRESS:

| |
|---|
| |
| |

நகரம் CITY:

தபால் குறியீடு POSTAL CODE:

மாநிலம் PROVINCE:

தொலைபேசி TELEPHONE:

மின் அஞ்சல் E-MAIL:

விண்ணப்பப் படிவம் அனுப்பப்பட வேண்டிய முகவரி

**THE INNER MAN – GTAC**
**7700 MARKHAM ROAD**
**P. O. BOX 3052**
**MARKHAM, ON L3S 4T1**

MAIL THE APPLICATION FORM TO THE ABOVE MENTIONED ADDRESS

gtachurch.ca

gtachurch.ca